Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 03 புதன்கிழமை (17.06.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 181

## விபத்துக்குள்ளான முதியவர் மரணம்

(வவுனியா)

முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த முதியவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந் 23

## வவுனியாவில் கஞ்சாவுடன் இளைஞன் கைது

(வவுனியா)

வவுனியா ஓமந்தைப் பகுதியில் இளைஞன் ஒருவரிடமிருந்து 6 கிலோ 400 கிராம் கஞ்சா மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புளியங்குளம் இராமனூர் விசேட அதிரடிப் படையினருக்கு நேற்றுக் கிடைத்த தகவல் ஒன்றில் ஓமந்தை 23

## இந்திய - சீன இராணுவம் எல்லையில் மோதல்

### இந்தியாவில் 20 சீனாவில் 43 பேர் பலி

(லடாக்)

இந்திய - சீன எல்லைப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் இந்தியத் தரப்பில் 20 வீரர்கள் மரணம் அடைந்ததாகவும் இந்த எண்ணி 23

## விபரீத முடிவெடுத்த யாழைச் சேர்ந்த பொலிஸ் உயிரிழப்பு



23

## தமிழரின் பிரச்சினையை ஆராய 12 உறுப்பினர்கள் கொண்ட குழு நியமனம்

### சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி

(கொழும்பு)

- தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய தேவை கிடையாது.
- ஜனாதிபதி கோட்டா தலைமையிலான அரசை தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் அழுத்தம் பிரயோகிக்க முடியாது.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், தமிழர்களின் பிரச்சினை குறித்து கூட்டமைப்பு ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியதேவையே 23

## கதிரையிலிருந்து கீழே விழுந்த 3 வயது சிறுவன் மரணம்

(கரணவாய்)

கதிரையிலிருந்து கீழே விழுந்த 3 வயதுச் சிறுவன் ஒருவன் மரணமடைந்துள்ளான்.

வடமராட்சி அல்வாய்ப் பகுதியைச் சேர்ந்த ஜெபநேசன் சீயோன் 23

| கொரோனா வைரஸ் | பாதிப்பு | புதிய தொற்றாளர்கள் | குணமடைவு | பலி |
|---|---|---|---|---|
| | 1915 | 10 | 1371 | 11 |

## யாழ்.மாநகர சபையின் தீயணைப்பு வாகனம் விபத்து

**ஒருவர் உயிரிழப்பு**



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையில் இருந்து பருத்தித்துறைக்கு விரைந்த தீயணைப்பு வாகனம் நீர்வேலிப் பகுதியில் விபத்துக்குள்ளாகியது. சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 23

## தேர்தல் சுவரொட்டிகளுடன் கரவெட்டியில் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

தேர்தல் சுவரொட்டிகளுடன் மூவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கரவெட்டிப் பகுதியில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை சந்தேகநபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

"சந்தேகநபர்களிட 23

## திருக்கேதீஸ்வர வளைவு உடைப்பு சம்பந்தமாக

### முழு வழக்கையும் விவாதிக்க உத்தரவு

(மன்னார்)

திருக்கேதீஸ்வர வளைவு உடைப்பு சம்பந்தமான முழு வழக்கையும் விவாதிப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மன்னார் 23


நாடாளுமன்றத் தேர்தல் - 2020
யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டம்
6
தமிழ் மக்கள் தேசிய கூட்டணி
10
X
நீதியின் கரங்களுக்கு நேர்மையான பக்கபலம்
க.வி.விக்னேஸ்வரன்

தவச்செல்வம் சிற்பரன்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தென்னங்கன்றுகள் இன்று வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கமநல சேவைகள் திணைக் களத்தில் தென்னை அபிவிருத்தி உத்தி யோகத்தர் ஜெ.சத்தியேந்திரம் அவர்களிடம் பதிவு செய்தவர்களுக்கான ஹைபிறிட் தென்னங்கன்றுகள் நல்லூர் கமநல சேவை கள் திணைக்களத்தில் வைத்து இன்று பிற்பகல் 2 மணிக்கு வழங்கப்படும்.

ஒரு தென்னங்கன்றின் விலை 160 ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை இன்று காலை 10 மணிக்கு மீசாலையில் வைத்து தென்னங்கன்றுகள் வழங்கப்படவுள்ளதாகவும் தென்னை அபி விருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரம் தெரிவித்துள்ளார். (ம-3)

## வல்லை கிணற்றில் துப்பாக்கி மீட்பு

(கரணவாய்)

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட நெற்கொழு வைரவர் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள கிணறு ஒன்றிலி ருந்து துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள கிணறு ஒன்றில் துப்பரவு மேற் கொள்ளப்பட்ட நிலையில் அங்கு பழமை வாய்ந்த துப்பாக்கி ஒன்று கண்டெடுக்கப்பட் டுள்ளது. இதனைத் தொடர்ந்து நீதிமன் றத்தின் உத்தரவைப் பெற்று இன்று புதன்கிழமை விஷேட அதிரடிப்படையினரி னால் மேற்படி கிணறு சோதனையிடப்படும் என வல்வெட்டித்துறை பொலிஸார் தெரி வித்தனர். (ம-3,60)


**பெண் வேலையாள் தேவை**

வயோதிபப் பெண் ஒருவரை வீட்டில் தங்கி பராமரிப் பதற்கு பெண் வேலையாள் தேவை.

தொடர்பு :

077 811 6881 / 077 355 3210

(C-9712)

**பதவி வெற்றிடம்**

கொழும்பில் இயங்கும் நிறுவனமொன்றுக்கு Account Keepers தேவை.


குறித்த துறையில் குறைந்தது 20 வருட அனுபவ முள்ள ஆண்கள் தங்களின் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை

No.100 / 5 Horton Place, Colombo - 07

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (& )

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 021 567 1532


# மரண அறிவித்தல்



## இளையதம்பி உமாபதிசிவம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி உமாபதிசிவம் நேற்று (16.06.2020) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - கதிர்யாசிப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - கதிர்யாசிப்பிள்ளையின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தங் கம்மாவின் அன்புக் கணவரும், பரமேஸ்வரன், வைகுந்தவாசன், வசந்தகுமாரன், பாஸ்கரன், சிவபாலன், சியாமளா, விக்கினேஸ் வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், லீலா, மதி, சியாமினி, தேவா, குணராசா, ரவிதர்மினி ஆகியோரின் அன்பு மாமனும், தேவகி, திவ்யா, கபிலன், வசீகரன், பவானி, வேணுகா, குகசாந், டிலக்சினி, குகதீபன், சுயாணா, பவித்திரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2020) புதன் கிழமை மதியம் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தம்மளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

(3044)

தகவல் : பிள்ளைகள்
076 701 6687

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
26-05-1985

உதிர்வு
18-05-2020

## அமரர் துரைராசா சுரேஸ் (பெல்ஜியம்)

இமைக்கும் நொடியில் எல்லாம் முடிந்து போனதுவோ
மறக்க மனமின்றி, கண்ணீர் வடிக்கின்றேன்
இறக்க மனமின்றி, இன்னும் வாழ்கின்றேன்
தொலைத்த தேவதையாய் உங்களைத் தேடி
எங்கே பயணிப்பது நான்
வருடம் மாறலாம் வாழ்க்கை மாறலாம்
ஆனால் உங்கள் நினைவு என்றும் மாறாது
என்றும் உங்கள் நினைவுகளுடன்.........

"கமலா இல்லம்"
பாடசாலை வீதி, கற்கோவளம்,
பருத்தித்துறை.

மனைவி,
லதா (சிந்து)

(3024)

# 2 ஆம் வருட நினைவலைகள்

மலர்வு
11
-
06
-
1934



உதிர்வு
17
-
06
-
2018

அமரர்

## கந்தையா செட்டியார் வாசுதேவன்


கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கன காலம் இருப்பீர்கள்.

அன்னாரின் இரண்டாம் ஆண்டின் நினைவாக பருத்தித்துறை புலோலி பகுதியைச் சேர்ந்த 50 குடும்பங்களிற்கு ரூபாய் 2000 பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் (3040) - குடும்பத்தினர்

# 31ம் நாள்

# நினைவஞ்சலி



18.05.2020 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் கந்தையா சிவபாதம்

**(இளைப்பாறிய பிரதி அதிபர், ஆசிரியர் கலாசாலை - பலாலி)**

அமைதியின் உருவமாகவும்
அடக்கத்தின் இருப்பிடமாகவும்
பண்பின் பெருந்தகையாகவும்
பாசத்தின் உறைவிடமாகவும்
எம் மத்தியில் அன்பு ஒளியாக
இருந்த உத்தமரே!
மண்ணோடு உங்கள் பூவுடல்
மறைந்து விட்டாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் இதயங்களில் இருந்து
ஒருபோதும் மறைவதில்லை!

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (17.06.2020) புதன்கிழமை லண்டனில் உள்ள
34 TITHE BARN CLOSE KINGSTON UPON THAMES KT2 6RZ எனும் இடத்தில் இடம்பெறும்.

(C-9713)

தகவல்:- குடும்பத்தினர்

# வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் தரம்-11 மாணவர்களுக்கான Zoom வகுப்பு நேர அட்டவணை

| திகதி | நேரம் | பாடம் |
|---|---|---|
| 17.06.2020 புதன் | 6.00 மு.ப - 7.00 மு.ப | தமிழ் |
| | 7.00 மு.ப - 8.00 மு.ப | கணிதம் |
| 18.06.2020 வியாழன் | 6.00 மு.ப - 7.00 மு.ப | ICT |
| | 7.00 மு.ப - 8.00 மு.ப | விஞ்ஞானம் |
| | 3.00 பி.ப - 4.00 பி.ப | கணிதம் |
| 19.06.2020 வெள்ளி | 6.00 மு.ப - 8.00 மு.ப | விஞ்ஞானம் |
| | 7.00 மு.ப - 8.00 மு.ப | ICT |
| 20.06.2020 சனி | 7.00 மு.ப - 8.00 மு.ப | கணிதம் |
| | 3.00 பி.ப - 4.00 பி.ப | வரலாறு |
| 21.06.2020 ஞாயிறு | 6.00 மு.ப - 7.00 மு.ப | விஞ்ஞானம் |
| | 7.00 மு.ப - 8.00 மு.ப | கணிதம் |
| | 3.00 பி.ப - 4.00 பி.ப | வரலாறு |

**Meeting ID 249 156 8241**

**Password DENP**

| ஆசிரியர் பெயர் | பாடசாலை பெயர் |
|---|---|
| ஆர்.சுகனன் | மு/இரணைப்பாலை றோ.க.ம.வி |
| கே.எம்.நித்தி | யா/சென்.பற்றிக்ஸ் கல்லூரி |
| ரி.நித்தியானந்தம் | யா/முத்துத்தம்பி ம.வி. |
| எம்.கஜீபன் | யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| எஸ்.கோபிநாத் | யா/சென்.பற்றிக்ஸ் கல்லூரி |
| ஜே.ஜெயகணேஷ் | யா/சென்.பற்றிக்ஸ் கல்லூரி |
| வி.ரவீந்தர் | யா/வயாவிளான் மத்திய கல்லூரி |

# வலயக் கல்வி அலுவலகம் - வவுனியா தெற்கு தரம்-10,11 மாணவர்களுக்கான Zoom வகுப்பு நேர அட்டவணை

| திகதி | நேரம் | பாடம் | கற்றல் தலைப்பு | ஆசிரியர் பெயர் | பாடசாலை பெயர் | Meeting ID |
|---|---|---|---|---|---|---|
| 18.06.2020 வியாழன் | 7.00 மு.ப-7.50 மு.ப | கணிதம்(TM) | தரவுகளை வகைக்குறித்தல் | எம்.பிரபாகரன் | வ/இறம்பைக்குளம் பெ.ம.வி | 876 3215 8902 |
| | 7.00 மு.ப-7.50 மு.ப | கணிதம்(EM)-10 | Equation | ஜே.சொரூபன் | வ/இறம்பைக்குளம் பெ.ம.வி | 824 6217 3272 |
| | 8.00 மு.ப-8.50 மு.ப | விஞ்ஞானம்(TM) | Paper Class | ஆர்.சந்திரு | வி/பாவற்குளம் பெ.ம.வி | 845 7252 9127 |
| | 8.00 மு.ப-8.50 மு.ப | விஞ்ஞானம்(EM) | Chemical reaction | எஸ்.துஷ்யந்தன் | வ/செட்டிகுளம் ம.வி | 879 5395 3522 |
| | 10.00 மு.ப-10.50 மு.ப | ஆங்கிலம் | Active & Passive | எம்.வர்மனன் | வ/நெளுக்குளம் கலைமகள் ம.வி | 892 3109 8433 |
| | 11.00 மு.ப-11.50 மு.ப | தமிழ் | குற்றாலக் குறவஞ்சி | எஸ்.வேல்ஸ்குமார் | வ/இறம்பைக்குளம் பெ.ம.வி | 848 8744 6979 |
| 19.06.2020 வெள்ளி | 7.00 மு.ப-7.50 மு.ப | கணிதம்(TM) | பெருக்கல் விருத்தி | ரி.சுகர்சன் | வ/அன்புபுரம் நா.வி | 876 3215 8902 |
| | 7.00 மு.ப-7.50 மு.ப | கணிதம்(EM)-11 | Pythagoras Theorem | ஜே.சொரூபன் | வ/இறம்பைக்குளம் பெ.ம.வி | 824 6217 3272 |
| | 8.00 மு.ப-8.50 மு.ப | விஞ்ஞானம்(TM) | Paper Class | பி.ரவிநாதன் | வ/பெரிய கோமரசன்குளம் ம.வி | 845 7252 9127 |
| | 8.00 மு.ப-8.50 மு.ப | விஞ்ஞானம்(EM) | Excretory System | எம்.நிக்சலா | வ/காமினி தேசியப் பாடசாலை | 879 5395 3522 |
| | 10.00 மு.ப-10.50 மு.ப | தமிழ் | தமிழர் பண்பாடு | எஸ்.வரதராஜன் | வ.கனேஸ்வரா ம.வி. | 848 8744 6979 |
| 20.06.2020 சனி | 6.00 மு.ப-6.50 மு.ப | வரலாறு | உலகப்போர்..... | கே.மயூரன் | வ/அல்.இக்பால் ம.வி | 820 7836 4399 |
| | 7.00 மு.ப-7.50 மு.ப | கணிதம்(TM) | தரவுகளை வகைக்குறித்தல் | எம்.பிரபாகரன் | வ/இறம்பைக்குளம் பெ.ம.வி | 876 3215 8902 |
| | 7.00 மு.ப-7.50 மு.ப | கணிதம்(EM)-10 | Equation | ஜே.சொரூபன் | வ/இறம்பைக்குளம் பெ.ம.வி | 824 6217 3272 |
| | 8.00 மு.ப-8.50 மு.ப | விஞ்ஞானம்(TM) | இனப்பெருக்கம் | எம்.ஹம்சா | வ/முஸ்லிம் மகாவித்தியாலயம் | 845 7252 9127 |
| | 8.00 மு.ப-8.50 மு.ப | விஞ்ஞானம்(EM) | Chemical reaction | எஸ்.துஷ்யந்தன் | வ/செட்டிகுளம் ம.வி | 879 5395 3522 |

# ஆரம்பப் பாடசாலைகளை மீளத் திறக்க அனுமதி

(கொழும்பு)

சுகாதார அமைச்சு வழங்கியுள்ள ஆலோசனைகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டு ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களை மீண்டும் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் என்பன திறக்கப்படவுள்ளன.

இதற்கான ஆலோசனைகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் 19 ஆயிரத்து 500 ஆரம்பப் பாடசாலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் பதிவு செய்யப்பட்டுள்ள ஆயிரத்து 500 சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் நாட்டில் இயங்குகின்றன என்றும் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நீல் பண்டார தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்ததைத் தொடர்ந்து, ஆரம்பப் பாடசாலைகள் உட்பட நாட்டின் அனைத்துப் பாடசாலைகளும் கடந்த 3 மாதங்களுக்கும் மேலாக மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## கல்விச் செய்திகள்

# மாணவர் அதிகம் ஒன்றுகூடாது இடைவேளையை வழங்க கல்வி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

பாடசாலைகளை மீள ஆரம்பிக்கும் போது பாடசாலை வளாகத்தில் மாணவர்கள் கூடுதல் மற்றும் குழுக்களாக இணைதல் ஆகியவற்றை தடுக்கும் வகையில் பாடசாலை இடைவேளை நேரத்தை பல தடவைகளுக்கு மாற்ற கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. இது தொடர்பான அறிவுறுத்தல்களை கல்வியமைச்சு பாடசாலை அதிபர்களுக்கு வழங்கியுள்ளது. (ஜ-8)

## இராசிபலன்

17.06.2020
ஆனி 03, புதன்கிழமை
ஏகாதசி முற்பகல் 8.49 மணிவரை
அச்சுவினி காலை 7.15 மணிவரை
சுபநேரம் 4.23-5.53 மணிவரை
இராகுகாலம் 11.53-1.23 மணிவரை
சந்திராஷ்டமம்- சித்திரை
ஏகாதசி விரதம்

வளவன்


மேஷம்

வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், கௌரவமானவர்களைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, நீங்கள் நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம்.


ரிஷபம்

ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


மிதுனம்

பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.


கடகம்

திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் நிறைவேறும் வாய்ப்புண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு.


சிம்மம்

சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்கள் கைகூடும்.


கன்னி

கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மற்றவர்களின் மனக் கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது.


துலாம்

நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.


விருச்சிகம்

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.


தனுசு

பொன்னான எதிர்காலம் அமைய புதிய வழி பிறக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், பிறர் உதவியுண்டு.


மகரம்

நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


கும்பம்

சமூகப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சுதந்திரமாகச் செயற்படுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மீனம்

மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

செலவழித்து நிம்மதியாயிரு, ஆனால் வீணாக்காதே.

# போக்குவரத்து முன்னுரிமை ஒழுங்குவிதி தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்

(கொழும்பு)

கடந்த 8 ஆம் திகதி ஆரம்பமான போக்குவரத்து முன்னுரிமை ஒழுங்கு வீதிச் சட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர். எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் மேலும் சில மார்க்கங்களில் முன்னுரிமை ஒழுங்குச் சட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாக மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அனைத்து மார்க்கங்களிலும் தமக்குரிய மருங்குகளில் பயணிக்காத சாரதிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தவறிழைக்கும் சாரதிகளுக்கு முதற்கட்டமாக எச்சரிக்கை விடுக்கப்படும். அதனையும் பொருட்படுத்தாது செயற்படுவோருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# தனிமைப்படுத்தல் பூர்த்தி 14 ஆயிரத்தைக் கடந்தது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் முகாம்களில் கண்காணிக்கப்பட்ட 14 ஆயிரத்து 97 பேர் இதுவரை தனிமைப்படுத்தல் செயற்பாட்டை பூர்த்தி செய்து வெளியேறியுள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

முப்படையினரால் நிர்வகிக்கப்படும் 44 தனிமைப்படுத்தல் நிலையங்களில் தற்போது 4 ஆயிரத்து 297 பேர் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் தனிமைப்படுத்தல் செயற்பாட்டை பூர்த்தி செய்த மேலும் 179 பேர் நேற்று வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# நேபாளத்திலிருந்து 34 பேர் நாட்டிற்கு


(கொழும்பு)

கொரோனாத் தொற்று காரணமாக நாடு திரும்ப முடியாத நிலையில் நேபாளத்தில் சிக்கியிருந்த 34 இலங்கையர்கள் நேற்றைய தினம் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர்.

குறித்த இலங்கையர்கள் நேபாளத்தின் காத்மண்டு நகரிலிருந்து ஹிமாலயா விமான நிலையத்திற்குச் சொந்தமான விமானமொன்றின் ஊடாக நேற்று முற்பகல் 11.30 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். (ஜ-8)

## 31 ஆம் நாள் நீங்கா துயரில்

அன்னை மடியில்
1985
05
26



ஆண்டவன் அடியில்
2020
05
16

### அமரர்.துரைராசா சுரேஸ் (பெல்ஜியம்)

எத்தனை, எத்தனை கனவுகள் கண்டாய். அத்தனையும் அடியோடு அழிந்து விட்டதே! நிஜமா அல்லது கனவா சொல் சுரேஸா. ஊருக்கு உத்தமனாய், உலகுக்கு நல்லவனாய் திகழ்ந்தாயே! ஏழை மக்களுக்கு தேடி உதவிகள் செய்தாயே. இன்று பிற நாட்டில் இருந்து வந்தாய் உன் மனைவியை கூட்டிச் செல்ல. தீராத கொடிய நோயினால் அகப்பட்டாய். விதியொன்று வந்ததோ காலனும் உன்னை அழைத்துச் செல்ல. விளையாட்டென்றாலே உனக்குக் கலை. நாட்டிற்கோ பெருமையைத் தேடிக் கொடுத்தாய். சின்னஞ்சிறு குழந்தைகளைக் கண்டால் அகமகிழ்ந்து விளையாடுவாயே. இன்று சித்தப்பா எங்கே என்று கதறும் குரல் கேட்கவில்லையா? தந்தையை இழந்தாய், நாட்டுக்காக உன் அண்ணனை இழந்தாய். பெற்ற தாயை, அன்புச் சகோதரனை, பாசமிகு மனைவியை, உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கதிகலங்க வைத்து விட்டு நீ எங்கு சென்றாய்? சுரேஸ் நீ மறையவில்லை எம் மனங்களில் உறைந்துள்ளாய். உன்னைக் காண என்றொரு நாள் நாமும் உன்னிடம் வருவோம் இது நிச்சயம்.

இன்றைய நாளில் உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!

நீலர்வளவு, தும்பளை,
பருத்தித்துறை.

உன் பிரிவால் விழிநீர் சொரியும்
தியாகேசன் குடும்பம்.
பேறாமக்களான:
தி.பிருந்தயன், தி.கபிசாயினி, தி.டினோத்யன்.

(3031)

# அத்துமீறிய மீன்பிடி மூலம் கொரோனா அபாயம்

# ஆளுநருக்கு மாநகர பதில் முதல்வர் கடிதம்





(யாழ்ப்பாணம்)

**அத்துமீறிய இந்திய மீனவர்களின் மீன்பிடி மூலம் மீண்டும் கொரோனாத் தொற்று பரவ வாய்ப்பு உண்டு. அத்துடன் நம்மவர்களின் வாழ்வாதாரமும் சுரண்டப்படுகிறது என யாழ்.மாநகர சபை பதில் முதல்வர் து.ஈசன் நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இந்திய மீனவர்கள் வடக்கின் கடல் எல்லைப் பரப்பிற்குள் அதிலும் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது தொடர்பில் பின்வரும் விடயங்கள் குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

குறிப்பாக மீன்பிடியை மட்டும் தமது வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்துவரும் குடும்பங்கள் இதனால் பாதிக்கப்படுவதுடன், தமது வருமானங்களையும் இழந்து சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய நிலைக்குள் தள்ளப்படுகின்றனர்.

இந்தியாவில் தற்பொழுது கொவிட்-19 தாக்கம் அதிகரித்து வருவதை நாம் அவதானிக்க முடிகின்றது.

இதனால் கொவிட் - 19 நிலைமைகள் குறைந்து சுமுகமான நிலையை நோக்கி நகரும் எமது மக்களின் வாழ்வில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் மூலம் மீண்டும் கொவிட்-19 தாக்கத்தை அதிகரித்து விடுமோ என்ற அச்சம் தோன்றுகின்றது.

எனவே மேற்படி விடயங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமாக கொரோனா பரவல் தாக்கத்தை வடக்கில் கட்டுப்படுத்துவதற்கு தங்களால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-5-18)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி சமுர்த்தி வங்கி உத்தியோகத்தரான அமரர். இராமராசா மயூரனின் நினைவாக இரத்ததான முகாம் நாளை 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை சிறுப்பிட்டி சமுர்த்தி வங்கியில் நடைபெறும். ஆர்வமுள்ளவர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (4-5)

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ அகத்தியர் தமிழ் சன்மார்க்க சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.போதனா வைத்திய சாலை இரத்த வங்கியின் ஒத்துழைப்புடன் இரத்ததான முகாம் நாளை 18 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்ற பிராந்திய மண்டபத்தில் நடைபெறும். (4-5)

## திருவாசக அரண்மனை,அருங்காட்சியகம் மூன்று மாதங்களின் பின் மீண்டும் திறப்பு

(குப்பிழான்)

கொரோனாத் தொற்றின் காரணமாக மூடப்பட்டிருந்த நாவற்குழி திருவாசக அரண்மனை, அரும்பொருட்காட்சியகம் ஆகியன மூன்று மாதங்களின் பின்னர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் மீளவும் திறக்கப்பட்டுள்ளன.

இதன்பிரகாரம் திருவாசக அரண் மனை தினமும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையும் திறந்திருக்குமெனவும், அடியவர்கள் சுகாதார விதிமுறைகளுக்கு அமைய , சமூக இடைவெளியைப் பின்பற்றியும் வழிபாடுகள் ஆற்ற முடியுமெனவும் சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருட் காட்சியகத்தை தினமும் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை சுகாதார நடைமுறைகளுக்கு அமையப் பார்வையிட்டுப் பயன்பெற முடியுமெனவும் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார். (4-5-18)

## மஹோற்சவம் இல்லை அபிஷேகம் மட்டும்

(குப்பிழான்)

• கொரோனாத் தொற்றுக் காரணமாக சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நிறுத்தப்பட்டுள்ளதாக ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ.வ. உமா சுதக் குருக்கள் அறிவித்துள்ளார். அதேவேளை மஹோற்சவ ஆரம்ப நாளான இன்று புதன்கிழமை முதல் 12 தினங்களும் காலை 6 மணி முதல் 9 மணிவரை மட்டுப் படுத்தப்பட்ட எண்ணிக்கையான அடியவர்களுடன் விசேட அபிஷேக, ஆராதனைகள் மாத்திரம் நடைபெறும் எனவும் தெரிவித்தார். (5-18)

## வசமாக மாட்டிய மோட்டார் திருடர்கள்

(கொடிகாமம்)

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நீர் இறைக்கும் இயந்திரங்களை திருடிய 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

கோப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த 4 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 4 நீர் இறைக்கும் இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் கைது செய்யப்பட்ட நால்வரும் நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதையடுத்து 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (4-5-114)

## ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட மணல், கிரவல்கள், சுண்ணாம்புக்கல் என்பன நாளை மறுதினம் 19 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற வளாகத்தில் பிராந்திய ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது.

குறித்த ஏல விற்பனையில் கலந்து கொள்ள வருபவர்கள் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் மேற்படி பொருட்களை பதிவாளரின் அனுமதியுடன் 'பொது மக்கள் பார்வையிட முடியும். ஏல விற்பனையில் பங்கு பற்றுபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளித்தல் வேண்டும். ஏல விற்பனையின் போது மதிப்பிடப்பட்ட விலை கிடைக்காத விடத்து அப்பொருளின் ஏலத்தில் பொருளினைக் கொள்வனவு செய்பவர் உடனடியாக பணத்தினைச் செலுத்தி ஏலப் பொருளை அப்புறப்படுத்த வேண்டும்.

கொடுப்பனவுகள் பணமாக மட்டும் செலுத்துதல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது ஆகிய நிபந்தனைகளைப் பின்பற்ற வேண்டுமென பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

## கூட்டமைப்பு உண்மையாகச் செயற்பட்டால் அரசுடன் இணையலாம்-மஸ்தான்




(நெளுக்குளம்)

தமிழ் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவளித்து நாட்டின் அபிவிருத்திக்காக உண்மையாகச் செயற்படுமானால் பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் அரசின் பங்காளிகளாவது பற்றி கலந்துரையாடலாம் என முன்னாள் பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி தேர்தலில் பெருவாரியான வாக்குகளை எமது ஜனாதிபதி பெறுவார் என்று நாம் கடந்தமுறை கூறினோம். அதனை மக்கள் நினைக்கவில்லை.

எனினும் 16 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் நாம் வெற்றிபெற்றோம். அதுபோல இந்த தேர்தலிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவதற்கு முயற்சி எடுக்கின்றோம்.

ஜனாதிபதி தேர்தல் காலத்துடன் ஒப்பிடும் போது தற்போது இப்பகுதியில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே ஜனாதிபதியின் செயற்பாடுகளில் நம்பிக்கை வைத்து அவரது கரத்தினை பலப்படுத்துவதற்காக, எமது வேட்பாளர்கள் மீது நம்பிக்கை வைத்து. எம்மை பாராளுமன்றம் அனுப்பி அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுக்கலாம் என எமது மக்கள் நினைக்கின்றமையால் நாம் நிச்சயம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவோம்.

இதேவேளை தமிழ் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவளித்து நாட்டின் அபிவிருத்திக்காக உண்மையாகச் செயற்பட்டு, நிபந்தனையற்ற ஆதரவினை வழங்கினால் அரசின் பங்காளிகள் ஆக்குவது தொடர்பாக உயர்மட்டத்தில் கலந்துரையாடப்படும் என்றார். (4-5-299)

# 6 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

நீர்கொழும்பு ஹொரண பகுதியில் 6 கிலோவும் 137 கிராமும் அடங்கிய ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருக்கு கிடைக் கப்பெற்ற தகவலின் அடிப்படையில் ஹொரண பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே குறித்த போதைப் பொருள் மீட்கப்பட்டது.

இதன்போது 45 வயதான சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் கட்டுநாயக்க குரணப் பகுதி யைச் சேர்ந்தவர் என ஆரம்பகட்ட விசார ணைகளின் போது தெரியவந்தது. (ஜ-8)

# சிறு வர்த்தக வியாபாரிகளுக்கு குறைந்த வட்டியுடன் கடன்

(கொழும்பு)

சிறு வியாபாரங்களுக்காக குறைந்த வட்டியுடன் கடன் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரம் இன்று சமர்ப்பிக்கப்படவுள்ளதாக பொரு ளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பிற்காக ஸ்தாபிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணி தெரிவித்துள்ளது. இதனடிப் படையில் 2 இலட்சம் ரூபாவுக்கு 4 வீத சலுகை வட்டியின் கீழ் வர்த்தகர்களுக்கு கடன் வழங்கப்படவுள்ளது. சனச, கிரா மிய வங்கி, கூட்டுறவு வங்கி ஊடாக கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு ள்ளது.

கொரோனாத் தொற்றினால் வீழ்ச்சி யடைந்துள்ள சிறு வர்த்தகங்களை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொரு ளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பிற்காக ஸ்தாபிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணி மேலும் தெரிவித்துள்ளது. (ஜ-8)

# தனியார் பேருந்துகளில் அதிகளவிலான பயணிகள்

## முறையிட இலக்கம்

(கொழும்பு)

தனியார் பேருந்துகள் சிலவற்றில் ஆசனங்களின் எண்ணிக்கையை விட அதிக பயணிகளை ஏற்றிச் செல்வதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு செயற்படும் தனியார் பேருந்துகள் தொடர்பில் 1955 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி முறைப்பாட்டை முன்வைக்க முடியும் என தேசிய போக்கு வரத்து ஆணைக்குழுவின் ஆணையா ளர் நாயகம், கொமாண்டர் நிலான் மிரெ ன்டா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில், இவ்வாறு கிடைக்கும் முறைப்பாடு கள் அனைத்தும் மேல் மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபைக்கு அனுப்பி வைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# உமா ஓயா பணிகளை நிறைவு செய்ய ஈரானிலிருந்து 85 பேர் வருகை

(கொழும்பு)

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத் தித் திட்டத்தின் பணிகளை நிறை வேற்ற ஈரானிலிருந்து 85 தொழில் நுட்பவியலாளர்கள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்கள் நேற்று முன்தினம் பிற் பகல் நாட்டை வந்தடைந்தனர்.

உமா ஓயாத் திட்டத்தின் சுமார் 95 வீதமான பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், எஞ்சியுள்ள வேலைகளை இவ்வருடம் டிசெம்பர் மாதத்திற்கு முன்னர் நிறைவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் ஊடாக 120 மெகா வோள்ட் நீர் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படவுள்ளது.

இவ்வாறு வருகை தந்தவர்கள் பி.சி. ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட தன் பின்னர் இராணுவத்தினரால் அவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட் படுத்தப்பட்டனர்.

தனிமைப்படுத்தல் காலப்பகுதிக்கு பின்னர் இரண்டாவது முறையாகவும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத் தப்பட்டதன் பின்னர் திட்டப்பணிகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும். (ஜ-4)

# கடந்த 15 நாட்களில் மட்டும் 322 டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

**கடந்த 15 நாட்களில் 322 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகத் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.**

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், கொழும்பு, கண்டி, இரத்தினபுரி மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் இருந்தே அதிக எண்ணிக்கையான தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 20 ஆயிரத்து 667 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஜனவரி மாதத்திலேயே அதிகளவு எண்ணிக்கையான தொற்றாளர்கள் (11 ஆயிரத்து 595 பேர்) பதிவாகியுள்ள னர். நாட்டில் நிலவும் மழைக்காலம் காரணமாக பொதுமக்கள் தமது வீடு, தோட்டம் மற்றும் சுற்றுப்புறங்களை சுத்தமாக வைத்திருக்குமாறு தொற்று நோயியல் பிரிவினர் எச்சரித்துள்ள னர். (ஜ-8)

# பிரதமர் மகிந்தவை சந்தித்த கருணாவின் மனைவி, மகள்



(கொழும்பு)

தமிழர் ஐக்கிய சுதந் திர முன்னணியின் தலை வரும் முன்னாள் பிரதி யமைச்சருமான விநா யகமூர்த்தி முரளிதரனின் (கருணா) மனைவியும் மகளும் இணைந்து பிர தமர் மகிந்த ராஜபக் ஷவை நேற்று முன்தி னம் சந்தித்தனர். (ஜ-4)


கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1990 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 173 1/4 செவ் 1 இல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: B.Com, Accounts System<br>எதிர்பார்ப்பு: படித்த குணமான பெண்<br>தொ.இ: B/10807 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>கி.பா: - செவ் 4 இல் உயரம்: 5'<br>தகைமை/தொழில்: B.A, MPED, M.Sc, விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி மணமகன்<br>தொ.இ: G/10811 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: செவ் 3 இல் உயரம்: 5'<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. கடற்தொழில்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10808 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: 60 1/4 செவ் 7 இல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.<br>எதிர்பார்ப்பு: சாதாரண மணமகன் வெளிநாடு எனின் கனடா விரும்பத்தக்கது<br>தொ.இ: G/10818 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: 15 1/2 செவ் 9 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Civil Engineering தொழில்நுட்ப உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு அரச தொழில் அல்லது வெளிநாடு<br>தொ.இ: B/10812 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா: 13 செவ் 2 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: B.Sc, கணித ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: Engineer, Accountant, Banker போன்ற உத்தியோகம் விரும்பத்தக்கது கொழும்பு விரும்பத்தக்கது<br>தொ.இ: G/10820 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>கி.பா: 7 1/2 செவ் 11 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: HND Computer Science completed & B.Sc Degree follow External Project Engineer in Doha<br>எதிர்பார்ப்பு: படித்த அழகிய பெண்<br>தொ.இ: B/10813 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா: 60 செவ் 11 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: B.FA. பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/10821 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



பழைமை வாய்ந்த

ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜவசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
- கணவன் – மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்



ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசிய முறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (C-9706)

றெங்கசாமி கண்டி. அம்பத்தன்ன - 077 112 3471 Viber - 076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

# ஆனி மாத இராசி பலன்கள்

## 15.06.2020- 15.07.2020



சார்வரி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி விரயஸ்தானத்தில் கேதுவோடு கூடியிருக்கிறார். சனி, விரயாதிபதி குரு, பஞ்சம மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன், புதன் ஆகியோர் வக்கிரம் அடைந்துள்ளனர். இத்தனை கிரகங்களின் வக்கிரங்களுக்கு மத்தியில் ஆனி மாதம் தொடங்குவதால் நெருக்கடிகள் அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதில் எண்ணற்ற தடைகள் ஏற்படும்.

மீன-செவ்வாய் சஞ்சாரம்

ஜூன் 20 ஆம் திகதி, செவ்வாய் மீன இராசிக்குச் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில், தாய்வழி ஆதரவு கிடைக்க வாய்ப்புள்ளது. உற்ற நண்பர்களாக இருப்பவர்கள், நெருக்கடியான காலகட்டத்தில் உங்களுக்கு உதவி செய்ய முன் வருவார்கள். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். வெளிநாட்டில் பணி புரியும் உறவினர்களைப் பற்றி அனுகூலமான தகவல் வரலாம்.

ரிஷப, மிதுன - புதன் சஞ்சாரங்கள்

ஜூன் 20 ஆம் திகதி புதன், வக்கிர இயக்கத்தில் ரிஷப இராசிக்குச் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது கைவிட்டுப் போன வேலைகள் மீண்டும் கிடைக்கலாம். புதிய வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நல்ல தகவல் வரும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். ஜூலை 4 ஆம் திகதி மிதுனத்திற்கு புதன் செல்கிறார். அது புதனுக்கு சொந்த வீடாகும். இதனால் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். குடும்பத்தினர் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். பணி புரியுமிடத்தில் மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கைகளை ஏற்பார்கள். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும்.




நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறலாம்.

தனுசு - குரு சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் மகரத்தில் நீச்சம் பெற்றிருந்த குரு, ஜூலை 8 ஆம் திகதி தனது சொந்த வீடான தனுசு இராசிக்கு வக்கிர இயக்கத்தில் வருகிறார். விரயாதிபதி, விரய ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரத்தில் விரயங்கள் கூடும். குடும்பத்திற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். தன்னம்பிக்கையை தக்க வைத்துக் கொள்ள வேண்டிய நேரமிது. கூட்டுத் தொழில் நடத்துபவர்களுக்கு கூட்டாளிகளால் தொல்லை ஏற்படலாம். பணியாளர்களை பகைத்துக்கொள்ள வேண்டாம். உத்தியோகத்தைப் பொறுத்தவரை திடீர் மாற்றம் ஏற்படும். இம்மாதம் இல்லத்து பூஜையறையில் அஷ்டலட்சுமி படம் வைத்து, வழிபட்டு வருவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப்பலன்கள்

விரயச் சனியின் ஆதிக்கம் மேலோங்கி இருப்பதால் விரயங்கள் அதிகரிக்கும். யாரையும் நம்பி எதையும் செய்ய இயலாது. கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். குடும்ப உறவில் விரிசல்கள் ஏற்படலாம். பணி புரியும் இடத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காது. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தாய்வழி ஆதரவு உண்டு.

சார்வரி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சனி, வக்கிரம் பெற்று இலாப ஸ்தானத்தில் கேதுவோடு இணைந்திருக்கிறார். செவ்வாய், உங்கள் இராசியிலேயே வீற்றிருக்கிறார். சனி மட்டுமல்லாமல் குரு, சுக்கிரன், புதன் ஆகிய கிரகங்களும் வக்கிரமாக இருக்கின்றன. எனவே எதையும் நினைத்த நேரத்தில் செய்ய இயலாது. நிகழ்காலத் தேவைகள் கடைசி நேரத்தில்தான் பூர்த்தியாகும். வாக்கு வாதங்களால் வருமானத் தடை ஏற்படும்.

மீன-செவ்வாய் சஞ்சாரம்

செவ்வாய், ஜூன் 20 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்தநேரத்தில், தொழில் வெற்றிநடை போடும். நெருக்கடி நிலை அகலும். நண்பர்கள் நல்ல தகவலைத் தருவர். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். சகோதர வர்க்கத்தினரின் சந்திப்பால் நன்மை உண்டு. ஒருசிலருக்கு தடைப்பட்ட வேலைவாய்ப்புகள் கிடைக்கும். அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட சலுகைகள் கூட, இப்பொழுது கிடைக்கக் கூடும்.



ரிஷப, மிதுன-புதன் சஞ்சாரங்கள்

புதன், ஜூன் 20 ஆம் திகதி ரிஷப இராசிக்கு வக்கிர இயக்கத்தில் வருகிறார். அங்கு சுக்கிரனோடு இணைந்து புத-சுக்கிர யோகத்தை உருவாக்குகிறார். இதனால் மனபயம் அகலும். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறும். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். வெளி நாட்டில் வசிக்கும் உறவுகளைப் பற்றி நல்ல தகவல் கிடைக்கும். குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். ஜூலை 4 ஆம் திகதி, மிதுனத்திற்கு புதன் செல்கிறார். அது புதனுக்கு சொந்த வீடாகும். அங்கு சூரியனோடு இணைந்து பாக்ய ஸ்தானத்தை வலுப்படுத்துகிறார். எனவே பூர்வீக சொத்துக்களால் இலாபம் அடைவீர்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சி வெற்றியாகும். சொந்தங்களால் வந்த துயர் விலகும். பணி ஓய்வு பெற்ற பிறகும் பணிபுரிய அழைப்புகள் வரலாம். வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள் உங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்றது போல் அமையும்.

தனுசு -குரு சஞ்சாரம்


மாதத் தொடக்கத்தில் மகரத்தில் நீச்சம் பெற்றிருந்த குரு, ஜூலை 8 ஆம் திகதி தனது சொந்த வீடான தனுசு இராசிக்கு வக்கிர இயக்கத்தில் செல்கிறார். அங்கிருந்து உங்கள் இராசிக்கு 3, 5, 7 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எனவே மனக் குழப்பம் அகலும். பணப் புழக்கம் தேவைக்கேற்ப வந்துசேரும். விலகிச் சென்ற உடன் பிறப்புகள் மனக்கசப்பை மறந்து செயற்படுவர். பிள்ளைகளால் வந்த தொல்லைகள் அகலும். திருமணம் கைகூடும். உறவினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். குடும்ப முன்னேற்றம் கூடும். இம்மாதம் சனி, கேது ஆகியவற்றின் பார்வை இருப்பதால், சனிக் கவசமும், நாக கவசமும் படித்து வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் நான்கு கிரகங்கள் வக்கிர இயக்கத்தில் இருப்பதால், குடும்பச் சுமை அதிகரிக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. கடுமையாக முயற்சித்தும் காரியங்கள் கடைசி நேரத்தில்தான் கைகூடும். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்பட்டு அகலும். உடன்பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறு துணையாக இருப்பர்.




**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



சார்வரி வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு, இலாப ஸ்தானத்தில் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். மேலும் சனி, சுக்கிரன், புதன் ஆகிய கிரகங்களும் வக்கிர இயக்கத்தில் இருக்கின்றன. பொதுவாக இராசிநாதன் வக்கிர இயக்கத்தில் இருக்கும் நேரத்தில், எதையும் துணிந்து செய்ய இயலாது. பண நெருக்கடி அதிகரிக்கும். 10 இல் சனி இருப்பதால் உத்தியோகத்தில் இருந்து விலகினாலும் புதிய உத்தியோகம் கிடைக்கும்.

மீன- செவ்வாய் சஞ்சாரம்

செவ்வாய், ஜூன் 20 ஆம் திகதி மீன இராசியான உங்கள் இராசிக்கே வருகிறார். 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், இராசியில் சஞ்சரிக்கும் பொழுது பெற்றோர் வழி ஒத்துழைப்பு கிடைக்கும். தேவைக்கேற்ற பணம் வந்து சேரும். குடும்ப முன்னேற்றம் கருதி, நீங்கள் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் அகலும். வாகன மற்றும் வீடு வகையில் பராமரிப்புச் செலவுகள் உண்டு. இது ஒரு இனிமையான காலகட்டமாக அமையும்.

ரிஷப, மிதுன -புதன் சஞ்சாரங்கள்

புதன், ஜூன் 20 ஆம் திகதி ரிஷப இராசிக்கு வக்கிர இயக்கத்தில் வருகிறார். உங்கள் இராசிக்கு 4, 7 இற்கு அதிபதியான புதன், வக்கிரம் பெற்று 3 ஆம் இடத்தில் உள்ள சுக்கிரனோடு இணையும் போது, உடன் பிறப்புகளின் திருமண முயற்சி அனுகூலம் தரும். உறவினர்களின் மனக்கசப்பு அகலும். இழந்த வாய்ப்புகளை மீண்டும் பெறுவீர்கள். எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். தற்காலிகப் பணியில் இருப்பவர்கள் பணி நிரந்தரம் பெறுவர். ஜூலை 4 ஆம் திகதி மிதுன இராசிக்கு புதன் செல்கிறார். அது புதனுக்கு சொந்த வீடாகும். சுக ஸ்தானத்தில் அதற்கு அதிபதியான புதன் சஞ்சரிக்கும் பொழுது, ஆரோக்கியத் தொல்லை அகலும். ஆதாயம் தரும் தகவல் வந்து கொண்டே இருக்கும். தாய்வழி ஆதரவு திருப்திதரும். தன்னிச்சையாகச் செயற்பட்டு முன்னேற்றத்தை வரவழைப்பீர்கள். இழுபறியாக இருந்த காரியம் இனிதே முடிவாகும்.




தனுசு -குரு சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் மகரத்தில் நீச்சம் பெற்றிருந்த குரு, ஜூலை 8 ஆம் திகதி தனது சொந்த வீடான தனுசு இராசிக்கு வக்கிர இயக்கத்தில் வருகிறார். அங்கிருந்து 2,4,6 ஆகிய மூன்று இடங்களையும் பார்க்கி றார். எனவே குடும்பச் சுமை குறையும். கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். கடன் பிரச்சினையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். பணி நிரந்தரம் பற்றிய தகவல் வந்து சேரும். சுயதொழில் செய்வோர் பங்குதாரர்களை அனுசரித்துச் செல்லுங்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சலுகைகள் மீண்டும் கிடைக்கும். தாய்வழி ஆதரவு உண்டு. இடம் விற்பனை செய்வது பற்றிச் சிந்திப்பீர்கள். இம்மாதம் குரு பகவான் கவசம் பாடி வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் 4 கிரகங்கள் வக்கிர இயக்கத்தில் இருப்பதால், எதையும் துணிந்து செய்ய இயலாது. விரயங்கள் கூடும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. எதிர்மறைச் சிந்தனைகளை தவிர்த்திடுங்கள். தாய் வழி ஆதரவு உண்டு. பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள். பணிபுரியும் பெண்கள் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

(முற்றும்)


# ஐ.எஸ்.ஐ.எஸ்.கல்விப் பிரிவின் பிரதானி இலங்கையர்; ஞானசார தேரர் ஜனாதிபதி ஆணைக்குழு முன் சாட்சியம்

(கொழும்பு)

**ஐ.எஸ்.ஐ.எஸ். சர்வதேச பயங்கரவாத அமைப்பின் கல்விப் பிரிவுக்கு பொறுப்பாக தௌஹீத் சிந்தனை கொண்ட அரச சார்பற்ற சிவில் அமைப்பாகச் செயற்பட்ட, வாமி என அழைக்கப்படும் உலக முஸ்லிம் வாலிபர் சபையின் கல்வி விவகாரத்துக்கு பொறுப்பாக இலங்கையரான இசாக் என்பவர் செயற்படுவதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் சாட்சியமளித்துள்ளார்.**

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நேற்று முன்தினம் இரண்டாவது நாளாகவும் சாட்சியமளிக்கும் போதே மேற்படி விடயத்தை வெளிப்படுத்தினார்.

இலங்கையில் தப்லீக், தௌஹீத், ஜமாத்தே இஸ்லாமி, இஹ்வான் ஆகிய சிந்தனைகள் ஊடாகவே அடிப்படைவாதம் விதைக்கப்படுவதாகவும் உயிர்த்த ஞாயிறுதின குண்டுத் தாக்குதல்களில் ஈடுபட்டவர்களும் அவ்வாறான சிந்தனைகள் உருவானவர்கள் எனவும் அவர் சாட்சியமளித்தார். அத்துடன் இலங்கையில் முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பில் தலையீடு செய்யும் அகில இலங்கை ஜம்ஈய்யதுல் உலமா சபையிலும் இந்த 4 சிந்தனைகளையும் கொண்டவர்களே உள்ளடங்குவதாகவும் அது பாரிய ஆபத்தானது எனவும் ஞானசார தேரர் சாட்சியமளித்தார்.



"இலங்கையில் முக்கியமாக 4 சிந்தனைகளின் கீழ் இயங்கும் அமைப்புக்களால் அடிப்படைவாதம் போதிக்கப்படுகின்றது. தப்லீக், தௌஹீத், ஜமாத்தே இஸ்லாம், இஹ்வான் ஆகியவையே அந்த சிந்தனைகள். குறித்த சிந்தனைகளின் கீழ், அரச சார்பற்ற நிறுவனங்களாக அல்லது சிவில் சமூக அமைப்புக்களாக இயங்கும் 43 அமைப்புக்கள் பிரதானமாக இந்த வேலையை முன்னெடுக்கின்றனர்.

தப்லீக் எனும் சிந்தனை இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டது. தப்லீக் எனும் சொற்பதமானது இஸ்லாத்தை பிரசாரம் செய்வதைக் குறிக்கும். இந்த சிந்தனையின் தோற்றுவிப்பாளர் இல்லியாஸ் என்பவர். இலங்கையில் தற்போது கிராண்பாஸ் பகுதியில் மர்கஸ் எனும் பெயரில் இதன் தலைமையகம் உள்ளது.

கடந்த 5 வருடங்களில் 18 ஆயிரம் பேர் இலங்கையில் முஸ்லிம்களாக மாற்றப்பட்டுள்ளனர். இவர்கள் சமாதிகள், உருவச் சிலை போன்ற வணக்கங்களை எதிர்க்கின்றனர். இவர்களைப் போன்றே ஏனைய தௌஹீத், ஜமாத்தே இஸ்லாமி, இஹ்வான் ஆகிய சிந்தனைகளும் இலங்கையின் சம்பிரதாய முஸ்லிம்கள் ஆதரித்த சமாதி வழிபாடு, உருவச் சிலை வழிபாடுகளை எதிர்ப்பதாக, தப்லீக் சிந்தனையுடன் ஒன்றிணைந்ததாக உள்ளது. இந்த தப்லீக் சிந்தனையை பரப்ப அவர்கள், மஹாலா, சிலா, வெள்ளி மர்க்கஸ் ஆகிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்கின்றனர்.

கிங்க்ஸ்பரி ஹோட்டலில் குண்டை வெடிக்கச் செய்தவர் கூட தப்லீக் சிந்தனையைக் கொண்டவர். அதேபோல் தௌஹீத் எனும் சிந்தனை சவுதி அரேபியாவில் அப்துல் வஹாப் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. அந்த சிந்தனையிலேயே அல்கெய்தா எனும் பயங்கரவாத அமைப்பு உருவாகியுள்ளது. தௌஹீத் என்றால் ஏகத்துவம் என்று அர்த்தம். அதாவது ஓரிறைக் கொள்கையை பின்பற்றுவது இலங்கையின் சம்பிரதாய முஸ்லிம்களான சூபி முஸ்லிம்கள் ஆதரிக்கும் தர்கா அதாவது சமாதி வணக்கங்கள் போன்றவற்றை தௌஹீத் சிந்தனையாளர்கள் உள்ளிட்ட அந்த 4 சிந்தனையாளர்களும் எதிர்க்கின்றனர்.

2016 இல் சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்துள்ள, தற்போதைய சிலோன் தௌஹீத் ஜமாத்தின் செயலரும் முன்னாள் இலங்கை தௌஹீத் ஜமாத் அமைப்பின் செயலாளருமான அப்துல் ராசிக், 9 தௌஹீத் தலைவர்களும் 90 கிளைகளும் அவர்களுக்கு நாடு முழுதும் உள்ளதாக கூறியுள்ளார். அத்துடன் 10 ஆயிரம் பேர் அவர்களின் உறுப்புரிமை பெற்ற உறுப்பினர்களும் உறுப்புரிமை பெறாமல் 50 ஆயிரம் பேர் வரையிலும் தௌஹீத் அமைப்புடன் உள்ளதாக கூறியுள்ளார்.

இந்த அப்துல் ராசிக் என்பவரும் சஹ்ரானும் சேர்ந்தே தௌஹீத் ஜமாத்தை ஆரம்பித்தனர். ஆனால் அப்துல் ராசிக் தற்போதும் சுதந்திரமாக வெளியே நடமாடுகின்றார்.

ஜமாத்தே இஸ்லாமின் கீழ் தலபா எனும் இளைஞர் அமைப்பு உள்ளது. அவர்கள் நாடளாவிய ரீதியில் முகாம்களை நடத்தி வருகின்றனர். அவ்வாறான முகாம்களில் பயிற்றப்பட்டவர்களே பிலிமத்தலாவையில் புத்தர் சிலையை உடைத்தனர். இந்த அமைப்பினர் சஹ்ரானுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்துள்ளனர்.

இந்த ஜமாத்தே இஸ்லாம் சிந்தனையின் கீழ், ஹிரா, செரண்டீப், ஓ.எம்.எஸ்.ஈ.டி. போன்ற அரச சார்பற்ற சிவில் அமைப்புக்கள் உள்ளன "என கலகொட அத்தே ஞானசார தேரர் சாட்சியமளிக்கும் போது தெரிவித்தார். (ஐ)

## 275 இலங்கையர்கள் டுபாயிலிருந்து இன்று வருகை

(கொழும்பு)

டுபாயில் வசித்து வரும் 100 கர்ப்பிணித்தாய்மார் உள்ளிட்ட 275 இலங்கையர்கள் இன்றைய தினம் நாடு திரும்பவுள்ளனர்.

நோய்வாய்ப்பட்டுள்ளவர்கள், தொழில் அனுமதிப்பத்திரம் காலாவதியானவர்கள் உள்ளிட்டவர்களும் இவ்வாறு நாடு திரும்பவுள்ளனர்.

இவ்வாறு நாடு திரும்பவுள்ள இலங்கையர்கள் அனைவரும் டுபாயில் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் என ஜனாதிபதியின் வெளிவிவகாரங்கள் குறித்த மேலதிக செயலாளர் அட்மிரல் ஜயனாத் கொலம்பகே தெரிவித்தார்.(ஐ-8)


## ஜேர்மன் நிறுவனங்களின் முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வம்

(கொழும்பு)

ஜேர்மன் நிறுவனங்கள் பல இலங்கையில் முதலீடு செய்வது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்று நிலைமைக்கு பின்னர் ஆசியாவின் மொத்த வர்த்தக சந்தை இலக்கை முன்னிலைப்படுத்தி ஜேர்மன் நாட்டு நிறுவனங்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளும் என்று ஜேர்மன் கைத்தொழில் மற்றும் வணிக சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதானி அன்றீஸ் வாகன் றோத தெரிவித்துள்ளார். கொரோனா வைரஸ் ஒழிப்பு நடவடிக்கையில் ஆசிய நாடுகள் மத்தியில் இலங்கை , வியட்நாம் மற்றும் தாய்வான் ஆகிய நாடுகள் சிறப்பாகச் செயற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நாடுகளில் சுகாதார நிலைமை மேம்பட்டுள்ளதை இது எடுத்துக்காட்டுகிறது. இலங்கை பல நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையைக் கொண்டுள்ளது என்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு உகந்த சூழ்நிலை இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)



## தாமரை கோபுர திட்டத்தின் முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி கவனம்

(கொழும்பு)

தாமரை கோபுரத் திட்டத்தை மிகவும் பயனுறுதி வாய்ந்த முதலீடாக உயர் நியமங்களுடன் நவீன மயப்படுத்தி நாட்டுக்கு வழங்க வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இத்திட்டத்துடன் இணைந்த முதலீட்டுத் திட்டங்கள் குறித்து உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு தெரியப்படுத்துவதை உடனடியாக ஆரம்பிக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு மற்றும் தாமரை கோபுரத்திட்டத்தின் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இத்திட்டத்துடன் இணைந்ததாக தாமரை கோபுரவளாகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள உணவகங்கள், வர்த்தக நிலையங்கள், களியாட்ட விளையாட்டு வசதிகள் குறித்து உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சந்தர்ப்ப மளிக்கப்பட வேண்டுமென்றும் பாரம்பரிய ஆக்கத்திறன்களுக்கும் இடமளிக்கப்பட வேண்டுமென்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ஐ-4-8)

# உற்ற நேரத்தில் உதவிய கரங்கள்



கொரோனா வைரஸ் காரணமாக அதிக கஷ்டங்களை அனுபவிக்கும் நீர்வேலியைச் சேர்ந்த கர்ப்பவதிகள், வயோதிபர்களுக்கு சுகாதாரத் துறையின் ஆலோசனைக்கு அமைய பொதுச் சுகாதார பரிசோதகர், மருத்துவ மாது, கிராம உத்தியோகத்தர்கள் போன்றோரின் கண்காணிப்பில் நீர்வேலி திருமுருகன் திருமண மண்டபத்தாரின் ஏற்பாட்டில் சத்துணவுப் பொதி வழங்கப்பட்டன. (4-5)



கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிளாலி கிராமத்தில் 62 குடும்பங்களுக்கு கல்விப் பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் அனுசரணையுடன் கனடாவின் மொன்றியலில் வசிக்கின்ற ஜொலி ரவல்ஸ் நிறுவுநர் ஐ.பரமேஸ்வரனின் நிதிப் பங்களிப்பில் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (5-89)



சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தால் முல்லைத்தீவு தெற்கு, கேப்பாபிலவு, அளம்பில் வடக்கு,அளம்பில் தெற்கு, செம்மலை , கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 50 மாற்றுத்திறனாளி குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன. (5-281)




வவுனியா வைரவப்புளியங்குளம்யங் ஸ்டார் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் கழகத்தில் அங்கம் வகிக்கும் 25 உறுப்பினர்களுக்கு கழகத் தலைவர் ஜீவன் தலைமையில் உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (5-299)



கனடாவிலிருந்து செயற்பட்டு வரும் நம் உறவுக்கு நாமே கைகொடுப்போம் தன்னார்வ அமைப்பின் 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் நிதி மாங்குளம் உயிரிழை அமைப்பின் அங்கத்தவர்களான மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள 113 முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவ செலவீனத்திற்காக பகிர்ந்தளிக்கப்பட்டது. (4-5)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் மற்றும் துணுக்காய் ஒளிரும் வாழ்வு அமைப்பு என்பவற்றின் ஏற்பாட்டில் லண்டன் ஓம் சரவணபவ சேவா அறக்கட்டளையின் நிதிப்பங்களிப்புடன் துணுக்காய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்விளான், மல்லாவி, தேறாங்கண்டல், அனிஞ்சியன்குளம், ஐயன், பாரதி நகர், யோகபுரம் மற்றும் துணுக்காய் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் 50 பேருக்கு மருத்துவச் செலவிற்காக தலா 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. (4-5)




சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தால் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்துக்கு வழங்கப்பட்ட கொவிட்-19 நிவாரண நிதியிலிருந்து வவுனியா உதைபந்தாட்ட சம்மேளனத்தைச் சேர்ந்த வீரர்கள் மற்றும் மத்தியஸ்தர்கள் உட்பட (நூறு) 100 பேருக்கு 1000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வவுனியா சம்மேளனத் தலைவர் அ.நாகராஜன் தலைமையில் வழங்கப்பட்டன. (4-5-299)




இளவாலை சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத்தின் மேழியூர் கரங்கள் செயற்றிட்டத்தின் கீழ் யுத்தம் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் தங்கள் குடும்ப உறவுகளை இழந்த குறைந்த வருமானம் பெறும் 30 குடும்பங்களுக்கு 2500 ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (5-281)



யாழிலிருந்து புலம்பெயர்ந்து டென்மார்க்கில் வாழ்ந்து வரும் து.செல்வக்குமார், செ.ஜெகதாசன், இ.வசிதரன், ம.மதனராஜா, சி.சிறீதரன், ஐ.சிவனேசன், இ.இராசகுமார் ஆகியோர் இணைந்து வழங்கிய நிதிப் பங்களிப்பில் வலி. வடக்கு மீள்குடியேற்றக் குழுத்தலைவர் ச.சஜீவன் ஊடாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தேராவில், வேணாவில், கைவேலி ஆகிய இடங்களைச் சேர்ந்த 57 குடும்பங்களுக்கும் உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (5-18)





(கரணவாய்)


கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் 95 ஆம் ஆண்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வசிக்கும் மாணவர்களின் நிறுவனங்கள் மூலம் நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை மற்றும் அச்சுவேலி, பலாலி, தெல்லிப்பழை பிரதேசங்களைச் சேர்ந்த 105 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. (5-60)

# வெலிசர முகாமைத் திறக்கத் தீர்மானம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட வெலிசர கடற்படை முகாமை எதிர்வரும் நாட்களில் திறப்பதற்கு எதிர்ப்பார்த்துள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சுகாதார வழிமுறைகளுக்கமைய முகாம் திறக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான கடற்படை சிப்பாய்களில் பூரண குணமடைந்து வீடு திரும்பியவர்களின் மொத்த எண்ணிக்கை 740 ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் 153 கடற்படை சிப்பாய்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (ஜ-4)

# மண் அகழப்பட்ட இடம் மீள் நிரப்பப்பட்டது

(முருகண்டி)

கிளிநொச்சி பெரியகுளம் பகுதியில் மண்ணகழ்வு இடம்பெற்ற பகுதி மீள்நிரப்பப்பட்டது. கடந்த சில நாட்களிற்கு முன்னராக குறித்த விடயம் தொடர்பில் செய்திகள் வெளியாகியிருந்தது.

இந்த நிலையில் குறித்த பகுதியில் மண்ணகழ்வு மேற்கொள்ளப்பட்ட பகுதி நேற்று மீள்நிரப்பப்பட்டது. இப்பகுதியில் விற்பனைக்கு தயாராக குவிக்கப்பட்டிருந்த மண் மற்றும் மேலதிகமாக அயலில் காணப்பட்ட மண் ஆகியவற்றை கொண்டு கணிசமான பகுதி மீள்நிரப்பப்பட்டது.

நேற்று முற்பகல் 9.30 மணியளவில் அப்பகுதியில் கண்டாவளை பிரதேச செயலாளர், கிளிநொச்சி உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் கனியவள திணைக்களத்தினர் ஆகியோரின் மேற்பார்வையில் பொது மக்கள் முன்னிலையில் குறித்த மீள் நிரப்பல் பணிகள் இடம்பெற்றன. (4-5-100)

# குணமடைந்தோர் 1371

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 29 கொரோனா தொற்றாளர்கள் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரை ஆயிரத்து 371 கொரோனா தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர்.

இதேவேளை, இலங்கையில் ஆயிரத்து 905 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் 523பேர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைபெற்று வருகின்றனர்.

அத்துடன் 46 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் வைத்தியக் கண்காணிப்பில் உள்ளனர்.

இந்நிலையில் நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, மாவட்ட/நீதிவான் நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட மணல் ஏல விற்பனை எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட/நீதிவான், நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (5)

# சட்டவிரோத மண் அகழ்வு எட்டுப்பேர் கைதாகினர்

(திருகோணமலை)

திருகோணமலை-கிண்ணியா- மணலாறு பகுதியில் சட்ட விரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட 8 பேர் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 4 டிப்பர்களும்,4 உழவு இயந்திரங்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

கிண்ணியா பொலிஸார் இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-8)






# எனக்கொரு சந்தர்ப்பத்தைத் தாருங்கள்- ரத்னபிரிய பந்து



(மன்னார்)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளர் கேணல் ரத்னபிரிய பந்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை மன்னாரில் தனது தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தார்.

வன்னியில் சிவில் பாதுகாப்புப் படையின் கட்டளை அதிகாரியாக இருந்த கேணல் ரத்னபிரிய பந்து, கடந்த ஆண்டு இடமாற்றம் செய்யப்பட்டார்.

இதையடுத்து அவர் இராணுவத்தில் இருந்து விலகியிருந்தார்.

இந்த நிலையில் கேணல் ரத்னபிரிய பந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளராக களமிறக்கப்பட்டார்.

இவரது முதலாவது பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள தனியார் வாகன வாடகை நிலையத்தில் இடம்பெற்றது. இதன் போது மக்களின் பிரச்சினைகளை கேட்டு அறிந்து கொண்டதோடு, பாராளுமன்றம் செல்ல மன்னார் மக்கள் தனக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குமாறும் கோரினார். (4-5-285)


அன்பு வாசகர்களே!

உங்கள் அபிமானத்துக்குரிய வலம்புரியில்



பேராசிரியர் முருகர் குணசிங்கம்

எழுதும்

“புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு”

நாளை முதல் வெளிவரும்

வாசிக்கத் தவறாதீர்கள்!


# நியூசிலாந்தில் இருவருக்கு கொரோனா

(வெலிங்டன்)

நியூசிலாந்து நாட்டில் வெளிநாடுகளில் இருந்து திரும்பிய 2 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது. அவர்களை சுகாதாரத்துறை அதிகாரிகள் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

கொரோனா வைரஸ் தங்கள் நாட்டிலிருந்து முற்றிலும் ஒழிக்கப்பட்டு விட்டதாக நியூசிலாந்து நாட்டின் பிரதமர் ஜெசிந்தா ஆர்டர்ன் அறிவித்திருந்தார். தொடர்ச்சியாக அந்த நாட்டில் 24 நாட்களாக கொரோனா தொற்று இல்லை. இதனால் ஊரடங்கு நீக்கப்பட்டு மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்பினர்.

இந்நிலையில் நேற்று நியூசிலாந்து நாட்டில் 2 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இரண்டு பேரும் பிரிட்டனுக்கு பயணம் மேற்கொண்டு நாடு திரும்பியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)




# 11 எம்.எல்.ஏக்கள் வழக்கு விவகாரம்;

# 6 பேரை 7 நாட்களுக்குள் பதிலளிக்குமாறு சட்டப்பேரவை செயலாளர் உத்தரவு

(சென்னை)

ஓ.பி.எஸ்.உட்பட 11 எம்.எல்.ஏக்களை தகுதி நீக்கம் செய்யக் கோரும் வழக்கில் புதிய திருப்பமாக புகார் அளித்த 6 பேரும் 7 நாட்களுக்குள் பதிலளிக்கும்படி சட்டப்பேரவை செயலாளர் உத்தரவிட்டு கடிதம் அனுப்பியுள்ளார்.

தமிழக சட்டசபையில் முதல்வர் எடப்பாடி பழனிசாமி கொண்டு வந்த நம்பிக்கைத் தீர்மானத்தின் மீது 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி நடைபெற்ற வாக்கெடுப்பின் போது தற்போதைய துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் உட்பட 11 எம்.எல்.ஏக்கள் நம்பிக்கை தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தனர்.

அவர்களை தகுதி நீக்கம் செய்யக்கோரி தி.மு.க. தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், இந்த விவகாரத்தில் சபாநாயகரே சட்டத்தின் அடிப்படையில் உரிய முடிவை எடுப்பார் என்று கூறி வழக்கை முடித்து வைத்தது.

அதன்பின்னர், எடப்பாடி பழனிசாமி அரசுக்கு எதிராக வாக்களித்த துணை முதல்வர் ஓ.பி.எஸ். உட்பட 11 எம்.எல்.ஏக்களுக்கு சபாநாயகர் தனபால் நோட்டீஸ் அனுப்பி இருந்தார்.

இந்த நிலையில், தி.மு.க. சார்பில் உச்ச நீதிமன்றத்தில் புதிய மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில் உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து 3 மாதங்கள் ஆகியும் சபாநாயகர் இது குறித்து எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

எனவே, உச்ச நீதிமன்றம் இந்த மனுவை விசாரணைக்கு ஏற்று ஓ.பன்னீர்செல்வம், கே.பாண்டியராஜன் உள்ளிட்டோரை தகுதி நீக்கம் செய்ய வேண்டும்' என்று கோரப்பட்டுள்ளது. இதற்கிடையே, 11 எம்.எல்.ஏக்களை தகுதி நீக்க கோரும் வழக்கில் புதிய திருப்பமாக முதல்வர் எடப்பாடி பழனிசாமி சபாநாயகருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அதில் 'உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் 11 எம்.எல்.ஏக்கள் பிரிந்திருந்த சமயத்தில் தாக்கல் செய்யப்பட்டவை. ஓ.பி.எஸ்.உள்ளிட்ட 11 எம்.எல்.ஏக்கள் மீது கட்சித்தாவல் தடைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை' என அதில் கூறியுள்ளார்

இதைத் தொடர்ந்து 11 எம்.எல்.ஏக்கள் மீது புகார் அளித்த 6 பேரும் 7 நாட்களுக்குள் பதிலளிக்கும்படி சட்டப்பேரவை செயலாளர் உத்தரவிட்டு அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். (ஜ-2)

# சர்ச்சைக்குரிய வரைபடம் குறித்து நேபாளத்துடன் பேச்சுவார்த்தையில்லை

## இந்திய வெளியுறவுத்துறை தெரிவிப்பு



(டில்லி)

சர்ச்சைக்குரிய வரைபடம் குறித்து நேபாள அரசுடன் எவ்வித பேச்சுவார்த்தைகளையும் முன்னெடுக்கப்போவதில்லை என இந்தியா தெரிவித்துள்ளது.

இந்தியாவின் நிலப்பகுதிகளை உள்ளடக்கிய சர்ச்சைக்குரிய வரைபடத்தை வெளியிட்ட நேபாளம் அதனை சட்டபூர்வமாக்க நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்து வாக்களித்துள்ளது.

இது தொடர்பாக இந்தியா நேபாள அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் பேச்சுவார்த்தைக்கே இடமில்லை என்று இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும் நேபாளத்துக்கும் இந்தியாவுக்குமான நீண்டகால நட்புறவை எந்த சக்தியாலும் தகர்த்து விட முடியாது என்று மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். (2)



# ஒஸ்கார் நிகழ்ச்சிகள் தள்ளி வைப்பு

(நியூயோர்க்)

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற இருந்த ஒஸ்கார் நிகழ்ச்சிகள் இரண்டு மாதங்கள் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

உலக அளவில் சினிமாத் துறையில் பல்வேறு பிரிவுகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு ஆண்டுதோறும் ஒஸ்கார் விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது.

சினிமாத் துறையின் உச்சபட்ச விருதான ஒஸ்காரை பெறுவதில் உலகின் பல்வேறு சினிமா பிரபலங்கள் முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கிடையில், 93 ஆவது ஒஸ்கார் நிகழ்ச்சிகள் அடுத்த ஆண்டு 2021 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி அமெரிக்காவில் உள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெறுவதாக இருந்தது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற இருந்த ஒஸ்கார் விருது வழங்கும் நிகழ்ச்சிகள் ஏப்ரல் 25 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஒஸ்கார் வரலாற்றிலேயே நிகழ்ச்சிக்கான திகதிகள் மாற்றியமைக்கப்பட்டது இது 4 ஆவது முறையாகும்.

இதற்கு முன்னதாக 1938 ஆம் ஆண்டு லொஸ்ஏஞ்சல்ஸில் ஏற்பட்ட வெள்ளம், 1968 ஆம் ஆண்டு மார்ட்டின் லூதர் கிங் கொல்லப்பட்டது, 1981 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ரேகன் கொல்லப்பட்டது ஆகிய மூன்று காரணங்களுக்காக மட்டுமே ஒஸ்கார் நிகழ்ச்சிகள் அறிவிக்கப்பட்ட திகதியில் இருந்து மாற்றி அமைக்கப்பட்டது.

தற்போது வரலாற்றிலேயே நான்காவது முறையாக கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக ஒஸ்கார் நிகழ்ச்சிகள் தள்ளி வைக்கப்படுகிறமை குறிப்பிடத்தக்கது. (2)

# தின

# வைரஸ்

# உலக நா



சீனாவில் ஹுபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டு பிடிக்கப்பட்டது. இந்த வைரஸ் தற்போது உலகின் 215 இற்கும் மேற்பட்ட நாடுக

# லண்டனில் வன்மு ஆர்ப்பாட்டத்தில்

## பிரதமர் போரிஸ்



(லண்டன்)

லண்டனில் கறுப்பின மக்களின் ஆர்ப்பாட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடந்த போராட்டத்தில் 100 இற்கும் மேற்பட்ட நபர்களை பொலிஸார் கைது செய்தனர்.

அமெரிக்காவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கறுப்பினத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் ஃபிலாய்ட் என்ற வாலிபர் உயிரிழந்ததைக் கண்டித்து அந்நாடு முழுவதும் நடைபெற்று வரும் போராட்டங்களுக்கு ஆதரவாக உலகின் பல்வேறு பகுதிகளில் நிறவெறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் இங்கிலாந்திலும் நிறவெறிக்கு எதிரான போராட்டம் தீவிரமடைந்துள்ளது.

# வெளிநாடு

## தினமும் புதிதாக ஒரு இலட்சம் பேருக்கு தொற்று

# ஸ் மீள் எழுச்சி பெற வாய்ப்பு உள்ளது

# நாடுகள் அவதானமாக இருக்க வேண்டும்



## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

(ஜெனிவா)

**உலகம் முழுவதும் கடந்த இரண்டு வாரங்களாக தினமும் புதிதாக ஒரு இலட்சம் பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டு வருவதாக உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

...ளில் பரவி பெரும் மனித பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

இந்த வைரஸிற்குத் தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இந்நிலையில், தற்போதைய நிலவரப்படி உலகம் முழுவதும் 81 இலட்சத்து 13 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை 42 இலட்சத்து 13 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் குணமடைந்துள்ளனர்.

எனினும் இந்த வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 4 இலட்சத்து 39 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், கடந்த இரண்டு வாரங்களாக தினமும் புதிதாக ஒரு இலட்சம் பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டு வருவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் ஆதனாம் கூறுகையில், 'தொடக்கத்தில் வைரஸ் தொற்று ஒரு இலட்சம் பேருக்கு பரவ இரண்டு மாதங்களுக்கு மேலானது.

ஆனால் தற்போது கடந்த இரண்டு வாரங்களாக தினமும் ஒரு இலட்சம் பேருக்கு வைரஸ் பரவுகிறது. குறிப்பாக தெற்கு ஆசியா மற்றும் அமெரிக்காவில் வைரஸ் பரவும் வேகம் மிகவும் அதிகமாக உள்ளது.

வைரஸ் மறு எழுச்சி பெறலாம் என்பதால், உலக நாடுகள் மிகுந்த கவனமாக இருக்க வேண்டும்' என மேலும் தெரிவித்துள்ளார். (2)

## ன்முறைகளுக்கு இடம் கிடையாது
## த்தில் ஈடுபட்ட 100 பேர் கைது

### ாரிஸ் கண்டனம்





தலைநகர் லண்டன் உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் லண்டனில் கறுப்பின மக்களின் ஆர்ப்பாட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வலதுசாரி அமைப்புகள் போராட்டத்தில் ஈடுபட்டன. அமைதியாகத் தொடங்கிய இந்தப் போராட்டத்தில் திடீரென வன்முறை வெடித்தது. போராட்டக்காரர்கள் பொலிஸாரை பயங்கரமாகத் தாக்கினர், அதனைத் தொடர்ந்து பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும் தடியடி நடத்தியும் போராட்டக்காரர்களை விரட்டியடித்தனர். இருதரப்பு மோதலில் பொலிஸ் அதிகாரிகள் 6 பேர் உட்பட ஏராளமானோர் படுகாயமடைந்தனர். வன்முறையில் ஈடுபட்டதாக 100 இற்கும் மேற்பட்டோரை பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

இந்த வன்முறை சம்பவத்துக்கு பிரதமர் போரிஸ் ஜோன்சன், உள்துறை அமைச்சர் பிரீத்தி பட்டேல் ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். லண்டன் வீதிகளில் வன்முறை வெறியாட்டங்களுக்கு இடம் கிடையாது என்றும் அதையும் மீறி ஈடுபட்டால் பொலிஸார் மூலம் ஒடுக்கப்படுவார்கள் என்றும் போரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார். (2)

## மாலியில் கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்
## 24 இராணுவ வீரர்கள் உயிரிழப்பு!



(பமாகோ)

மாலி நாட்டில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் இராணுவ வீரர்கள் 24 பேர் உயிரிழந்தனர். மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் 2012 ஆம் ஆண்டு முதல் கிளர்ச்சியாளர்கள் குழுவினருக்கும் இராணுவத்திற்கும் இடையே மோதல்கள் நடந்து வருகிறது.

அந்நாட்டின் வடக்குப் பகுதியில் பெரும்பாலான இடங்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள இந்த கிளர்ச்சியாளர்கள் குழு பொதுமக்கள் மீதும் அவ்வப் போது தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில் அந்நாட்டின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள புல்ஹா வாரி மாகாணத்தில் நேற்று முன்தினம் இராணுவ வீரர்கள் சென்று கொண்டிருந்த வாகனங்களை குறி வைத்து கிளர்ச்சியாளர்கள் திடீரெனத் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் இராணுவ வீரர்கள் 24 பேர் உயிரிழந்தனர். மேலும் பல வீரர்கள் படுகாயமடைந்தனர்.

இந்தத் தாக்குதலின்போது இராணுவ வீரர்களின் ஆயுதங்களையும் வாகனங்களையும் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றிச் சென்றுள்ளனர். (2)

# எம்முடன் இணைந்ததால் குற்றச்சாட்டிலிருந்து விடுபட முடியாது

# நல்லாட்சி முறைகேடுகளுக்கு மைத்திரியே பொறுப்பாவர்

## மகிந்த யாப்பா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சுதந்திரக் கட்சியுடன் கூட்டணியமைத்திருந்தாலும் அரசியல் ரீதியிலான போட்டியில் தனித்தே செயற்படும் என்றும் நல்லாட்சி அரசாங்கத்தின் முறைகேடுகள், அதிகார துஷ்பிரயோகம் ஆகியவற்றுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்புக்கூற வேண்டும் என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசாங்கத்தில் முக்கிய பங்கு வகித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இணைத்துக் கொண்டு பொதுஜன பெரமுனவினர் அரசியல் ரீதியில் பயணிப்பதாக மக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சி பொதுஜன பெரமுனவில் ஒரு கூட்டணிக் கட்சியாக இணைந்துள்ளதே தவிர முக்கிய பங்காளி ஒன்றுமல்ல.


பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுன மொட்டுச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு இதுவும் ஒரு பிரதான காரணியாகும்.

மக்களே சிறந்த தீர்மானத்தை எடுப்பார்கள். நல்லாட்சி அரசாங்கத்தில் இடம்பெற்ற முறைகேடுகள், அதிகார துஷ்பிரயோகம் ஆகியவற்றுக்கு அரச தலைவர் என்ற வகையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பொறுப்புக்கூற வேண்டும்.

சுதந்திரக் கட்சியினர் பொதுஜன பெரமுனவுடன் இணைந்து கொண்டுள்ளதால் கடந்த காலங்களில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபட்டதாகக் கருத முடியாது.

கூட்டணி அமைத்துள்ளோம். அவர்கள் தனித்துப் போட்டியிடுகிறார்கள். மக்கள் பிரதிநிதியாக தெரிவு செய்ய வேண்டுமா? வேண்டாமா? என்பதை மக்களே தீர்மானிப்பார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# இரு கார்கள் மோதல்; இயக்குநரின் மகள் பலி!



(கொழும்பு)

இரண்டு கார்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை வெள்ளவத்தை பழைய ஹவ்லொக் வீதியில் இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வெள்ளவத்தை பாமன்கடையில் இருந்து மாயாசுற்று வட்டம் நோக்கிப் பயணித்த கார் எதிர்த்திசையில் வந்த காருடன் நேருக்கு நேர் மோதியுள்ளது.

குறித்த விபத்தில் காயமடைந்த மூவர் களுபோவில வைத்தியசாலையிலும் நாரஹேன்பிட்டி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்தில் சிங்களத் திரைப்பட இயக்குநர் சந்திர ரட்ணவ மப்பிடிகமவின் மகள் வினாவி (வயது-41) களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதுடன் ஏனைய இருவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மந்திரமா? தந்திரமா?

எனக்கு வேண்டப்பட்ட ஒருத்தர்...சீரியஸ் ஆகவே என்னிடம் ஒரு யோசனை கேட்டார். "ஏன் சேர் சுலபமாகச் சம்பாதிக்கிறதுக்கு வழி என்னவென்று நானும் பலநாள் யோசித்துப்பார்த்து விட்டுத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கின்றேன். இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்றார்.

"என்ன முடிவு அது?" என்று விசாரித்தேன். "எனக்கு தெய்வீக அருள் இருக்கு என்று சொல்லிக்கொண்டு ஒரு மரத்தடியிலே உட்கார்ந்து கொள்ள வேண்டியது. மக்கள் தேடி வருவாங்கள்... அவர்களிடம் ஏதாவது வாங்கிக்கொண்டு அருள்வாக்கு சொல்ல வேண்டியது... எப்படி இந்தத் திட்டம்?" என்றார்.

"இந்தக்காலத்திலே மக்கள் அவ்வளவு சுலபமாக உங்களை நம்பிவிடுவார்களா?" என்றேன். "ஏன் மாட்டார்கள்.... அதுக்கும் கைவசம் சில மந்திரங்கள் எல்லாம் கற்று வைத்திருக்கின்றேன். அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்து காட்டினால் சுலபமாக கூட்டம் சேர்ந்திடும்!" என்றார்.

"அது என்ன மந்திரம்" என்று விசாரித்தேன். "மந்திரம் எல்லாம் ஒன்றும் இல்லை. எல்லாம் தந்திரம் தான்" என்று சொல்லி என்னிடம் சில விபரங்களைச் சொன்னார்.

அதை எல்லாம் இப்ப உங்கள் காதிலையும் போட்டு வைக்கின்றேன்.

ஏன் என்றால் வேண்டப்பட்ட அந்த நபர் மாதிரி சில பேர் உங்க ஊருக்கும் வரலாம்... அப்படி வந்தால் நீங்கள் ஏமாறாமல் இருக்க வேண்டும் இல்லையா ....?அதுக்காக சில பேர் என்ன செய்வார்கள் தெரியுமா? உங்கள் ஊருக்கு வருவார்கள். ஏதாவது ஒரு இடத்திலே உட்கார்ந்து மந்திரம் சொல்லுவார்கள். பூமிக்குள்ளே இருந்து கடவுள் வரப்போகிறார். அவரை வரவழைக்கின்ற மந்திரம் தான் இப்ப சொல்லிக் கொண்டிருக்கின்றேன் என்பார்கள்.

மக்கள் எல்லாம் சுற்றி நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டு இருப்பார்கள். நிஜமாகவே அந்த இடத்திலே பூமி லேசாக வெடிக்க ஆரம்பிக்கும். உள்ளேயிருந்து ஒரு சிலை வெளியே வர ஆரம்பிக்கும்... உடனே இவர் காலிலே விழுந்து எல்லாரும் கும்பிடுவார்கள்.

இதை எப்படி செய்கிறார்கள் தெரியுமா? சுண்டல் கடலை இருக்கல்லவா. அதை ஊற வைக்க வேண்டும். முதல் நாள் இரவே யாருக்கும் தெரியாமல் அந்த இடத்திலே குழியைத் தோண்டி ஊற வைத்த சுண்டல் கடலையை தேவையான அளவுக்கு கொட்டி ... அதிலே சின்னதாக ஒரு சாமி சிலையை வைத்து... மண்ணை போட்டு மூடி வைக்க வேண்டும். மறுநாள் காலையிலே மக்களை கூட்டிக்கொண்டு போய் அந்த இடத்திலே உட்கார்ந்து மந்திரம் சொல்ல வேண்டும்... ஊற வைத்த கடலை முளைக்க ஆரம்பிக்கிறதாலே... அந்த இடம் லேசாக வெடிக்க ஆரம்பிக்கும்... சாமி சிலை வெளியே வரும்.

இதுதான் அதில் உள்ள தந்திரம். வெறும் கையிலே விபூதி வரவழைக்கின்றது எப்படித் தெரியுமா? வடிக்கின்ற கஞ்சியிலே... விபூதியைக்கலந்து சின்ன சின்ன உருண்டையாக உருட்டி காயவைக்க வேண்டும். அதிலே ஒரு உருண்டையை எடுத்து விரல் இடுக்கிலே சுலபமாக மறைத்து வைத்திருக்கலாம். பக்தர்கள் கையை நீட்டும் போது இந்த உருண்டையை விரல் நுனிக்குக் கொண்டு வந்து உதிர்த்து விடலாம். உருண்டை சிறிதாக தெரிந்தாலும்விபூதி நிறைய வரும்.

சில படங்களிலே சட்டத்திலே லாட்டிக் அமிலத்தை ஸ்பிறே பண்ணி வைத்து விட்டால்... காற்றிலே உள்ள ஈரத்தாலே சாம்பல் உருவாகும்.அப்படி உருவாகிற சாம்பல் விபூதியாகக் கொட்டும். சிலபேர் நெருப்பு இல்லாமலே தீயை உண்டாக்குவாங்கள். அது எப்படி என்றால் பொட்டாசியம் பர்மாங்கனேட் துகள்களை போட்டு விட்டு அது மேலே கிளிசரினை ஊற்றினால் போதும் நெருப்பு இல்லாமலே அது எரியும்.

சில பேர் தான் சமாதி நிலையிலே இருக்கிறதாகவும் அந்த சமயம் நாடித்துடிப்பு கூட இருக்காது என்றும் சொல்லுவார்கள். டாக்டர்களும் சோதித்துப்பார்த்து விட்டு அதுசரி தான் என்று சொல்லுவார்கள். இது எப்படி என்றால் பட்டரி மாதிரி கடினமான பொருளை கக்கத்துலே வைத்து அழுத்திக்கொண்டால் போதும் மணிக்கட்டிலே நாடித்துடிப்பு தெரியாது.

இப்படி நிறைய தந்திரங்கள்...அதெல்லாம் மந்திரம் என்கின்ற பேரிலே செல்லும்படி ஆகிக்கொண்டிருக்கு. அசல் எது? போலி எது? என்கிறதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். அறிவுபூர்வமான ஆன்மீக உணர்வுதான் மக்களை மேம்படுத்தும்.

ஒரு ஊரிலே ஒரு சாமியார் ஒரு சீட்டு விற்றுக் கொண்டிருந்தார். 'என்ன சீட்டு அது?' என்று விசாரித்தார்கள். "இதிலே ஒரு சீட்டு வாங்கினால் போதும்... இது வரைக்கும் நீங்கள் செய்த பாவம் எல்லாம் போய்விடும். விலை 100 ரூபா "என்றார்.

மக்கள் முண்டி அடித்துக்கொண்டு ஆளுக்கு ஒன்று வாங்கிக்கொண்டு போனார்கள். அதிலே ஒருத்தன் மட்டும் 200 ரூபா கொடுத்து "எனக்கு 2 சீட்டு கொடுங்கள்" என்றான். வாங்கிக்கொண்டு போனான்.


எல்லா சீட்டையும் விற்ற பிறகு அந்த சாமியார் தனியாக ஒரு மண்டபத்திலே போய் உட்கார்ந்து வசூல் எவ்வளவு என்று எண்ணிப்பார்த்தார். 10,000 ரூபாய்க்கு மேலே இருந்தது.அதை மூட்டையாகக் கட்டி தோளிலேயே போட்டுக்கொண்டார்.

இருட்டிப் போய் விட்டது. ஒரு காட்டு வழியாக அடுத்த ஊருக்குப் போய்க்கொண்டு இருந்தார். வழியிலே திடீர் என்று ஒரு திருடன் வந்து நின்று வழி மறித்தான். கத்தியைக் காட்டினான். இருக்கின்ற எல்லாத்தையும் கொடு என்றான் பறித்து விட்டான் பண மூட்டையை

சாமியார் பதறினார்... "இது மகாபாவம் தெரியுமா உனக்கு?" என்றார். "தெரியும்... அதுக்காகத்தான் அப்பவே உன்னிடம் 200 ரூபா கொடுத்து இரண்டு சீட்டு வாங்கிக் கொண்டேன். அது நான்தான்" என்றான்.

"என்னப்பா சொல்கிறாய்?" என்றார் இவர் விபரம் புரியாமல்.

"இதுவரைக்கும் நான் கொள்ளை அடித்த பாவம் தீர்க்கிறதுக்கு ஒரு சீட்டு... இப்ப உன்னிடம் கொள்ளை அடிக்கின்றேன் இந்த பாவம் தொலைய இன்னொரு சீட்டு அதுதான் முன்னெச்சரிக்கையாக இரண்டு வாங்கிக்கொண்டேன்" என்றான்



# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## யாழ்ப்பாண கீரைவகை மூலிகைகளும் அவற்றின் மருத்துவ முக்கியத்துவங்களும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

எமது உணவு முறைகளை எளிமையாகவும் ஆரோக்கியமானதாகவும் அமைத்துக்கொள்ளல் அவசியமாகும். காலை உணவு நிச்சயமாக உண்ண வேண்டும். கோதுடன் சேர்ந்த உணவுகள் அதாவது பாசிப் பயறு, கௌப்பி, கடலை மிகச் சிறந்தவையாகும்.

காய்கறி, இலைக்கீரை வகைகள் போதியளவு சேர்த்து உண்ணுதல் அவசியமாகும். மதிய உணவில் சோறு அளவாகவும் காய்கறி, இலைகறி / சுண்டல் கூடுதலாகவும் சேர்த்து உண்ணல் சிறப்பாக அமையும்.

காய்கறி, இலைக்கீரைகளை பச்சையாக தயாரித்து ஒரு வேளையாவது உண்ண வேண்டும். அதாவது சலாட், பானங்களாக அருந்தலாம். மலிவான போசணை நிறைவான உள்ளூர் உணவுகளில் தின உணவில் இலைக்கீரை வகை மூலிகைகளை முடிந்தளவு அடிக்கடி பயன்படுத்தல் அவசியம்.





### முருங்கை இலை

**Botanical Name - Moringa Oleifera**

எல்லா கீரைகளையும் விட விற்றமின் A அதிகம் உள்ளதால் கண்பார்வைக் குறைவு, மாலைக்கண் நோய் உள்ளவர்கள் இதனைப் பயன்படுத்தலாம். பொட்டாசியம் உள்ளதாலும் சோடியம் இல்லாததாலும் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் இதனைப் பயன்படுத்தலாம்.

நீரிழிவு நோயாளிகள் கூட முருங்கைக்கீரைப் பொடி பயன்படுத்தினால் வலிமை அடைவர். பொஸ்பரஸ், இரும்புச்சத்தும் மூளைக்கும் இரத்த சுத்திக்கும் நரம்பு வீரியத்திற்கும் துணைபுரியும். உடனடி தாது பலம் பெருகும். தூக்கமின்மை, வலிப்பு, சிறுநீரக நோய்களையும் தீர்க்கும் ஆற்றல் மிகுந்த கீரை.

முருங்கைக்கீரையோடு உப்பு சேர்த்து அவித்து தொடர்ந்து 15 நாட்களுக்கு சாப்பிட்டால் மூட்டு வலிகள் குணமாகும்.

முருங்கைக் கீரையை நன்கு கழுவி வெயிலில் உலர்த்தி அரைத்துக் கொள்ள வேண்டும். வாணலியில் மிளகாய், உழுத்தம் பருப்பு, சீரகம், மிளகு என்பவற்றை வறுத்து கீரைப் பொடியுடன் கலந்து ஒரு போத்தலில் இட்டு வைக்கவும். சாதத்துடன் சாப்பிடும் போது நெய் ஊற்றி சாப்பிடவும்.

### முருங்கைக் கீரை சூப்

தேவையானவை

- முருங்கைக்கீரை - 1கைப்பிடி
- தக்காளி - 50 கிராம்
- சின்ன வெங்காயம் - 7
- கறிவேப்பிலை - 1 நெட்டு
- செத்தல் மிளகாய் - ஒன்று
- உப்பு - தேவையான அளவு
- மிளகு - 1 தே.க.
- சீரகம் - 1 தே.க.
- சோம்பு - 1/2 தே.க. (அல்லது இஞ்சி)
- மல்லி - 3 தே.க.
- பூண்டு - 5 பல்

செய்முறை

01) மிளகு, சீரகம், இஞ்சி, மல்லி, பூண்டு, செத்தல் மிளகாய், உப்பு முதலானவைகளை நன்கு அரைத்துக் கொள்வோம்.

02) சின்ன வெங்காயம், தக்காளி, முருங்கைக்கீரை, கறிவேப்பிலை முதலானவைகளைத் துப்புரவாக்கிக் கழுவுவோம். சிறு துண்டுகளாக்குவோம்.

03) அரைத்த முருங்கையிலைக் கூட்டை நீர்சேர்த்துக் கொதிக்க வைப்போம். அவ்வேளையில் நறுக்கிய வெங்காயம், தக்காளி முதலானவற்றையும் சேர்த்து அவிய விடுவோம்.

04) கீரை வெந்ததும் கறிவேப்பிலையைப் போட்டு இறக்கிப் பரிமாறுவோம்.

### முருங்கைக் கீரைப் பொடி

தேவையானவை

- ஆய்ந்து சுத்தம் செய்த கறிவேப்பிலை - 2 கப்
- துவரம்பருப்பு - 1 மேசைக் கரண்டி
- உழுத்தம் பருப்பு - 1 மேசைக் கரண்டி
- போதுமான அளவு மிளகும் உப்பும்

செய்முறை

01) சுத்தம் செய்த முருங்கைக்கீரை இலையைப் நிழலில் உலர்த்தி எடுப்போம்.

02) உலர்ந்தபின் வெறும் தாச்சியில் போட்டு மொறுமொறு எனும் நிலைவரை வறுத்து எடுப்போம்.

03) அதேபோல உழுத்தம் பருப்பு, துவரம் பருப்பு தனித் தனியே வறுத்து எடுத்தல்.

04) பின் வறுத்த முருங்கைக்கீரை, உழுத்தம் பருப்பு, துவரம் பருப்பு, மிளகு, உப்பு முதலானவைகளை உரலில் நன்றாக இடித்து எடுப்போம்.

05) குழம்பு, ரசம் முதலானவைகளுடன் 1 மேசைக்கரண்டி முருங்கை இலைப் பொடியை கரைத்துச் சேர்த்துக் கொள்ளும் போது அதன் சுவை மேம்படுவதாக அமைவதைக் காணலாம்.

06) துவரம் பருப்பு, உழுத்தம் பருப்பில் மேலான புரதமும் முருங்கையிலையில் ஏனைய கனியுப்புக்கள் அடங்குவதனால் இப்பொடி சேர்க்கும் உணவுகள் யாவும் நிறை உணவாகும்.

### முருங்கைக்கீரை சேர் அடை

தேவையானவை

- கைப்பிடி முருங்கைக்கீரை
- இட்லி அரிசி - 250 கிராம்
- கடலைப்பருப்பு - 50 கிராம்
- துவரம் பருப்பு - 50 கிராம்
- செத்தல் மிளகாய் - 3
- இஞ்சி - சிறுதுண்டு
- மிளகு - 10
- உப்பு - அளவாக
- எண்ணெய் - 2மே.கரண்டி

செய்முறை

01) அரிசியைத் தனித்தனியாக ஊறவைக்கவும் (1 மணி நேரம்)

02) அதேபோல கடலைப்பருப்பு, துவரம் பருப்பை துப்புரவாக்கி ஒருமித்து ஊறவைக்கவும்.

03) இஞ்சியைத் துப்புரவாக்கிக் கழுவி நறுக்குவோம். செத்தல் மிளகாய், மிளகு முதலானவைகளையும் துப்புரவாக்கவும்.

04) அரிசியை வடித்து எடுத்து கரகரப்பாக அரைக்கவும். இவற்றுடன் செத்தல் மிளகாய், இஞ்சி, மிளகு, பருப்பு முதலானவைகளையும் சேர்த்து அரைக்கவும்.

05) இக்கலவையுடன் உப்பு, துப்புரவாக்கிக் கழுவி, நறுக்கிய முருங்கைக்கீரையையும் சேர்த்து நன்றாகக் கலந்து கொள்ளவும்.

06) தோசைக்கல்லை அடுப்பில் வைத்து மிதமான சூடு ஏற்றவும். தோசைக்கு ஊற்றுவதை விட சிறிது அதிகம் மாவை ஊற்றி வேகவிடவும். மா ஊற்றமுன் தேங்காய்எண்ணெயை தோசைக் கல்லில் ஊற்றி நன்கு துடைத்துக் கொள்ளவும். இருபக்கமும் புரட்டி நன்கு வேகவிட்டு எடுக்கவும்.

07) ஒவ்வொரு முறை மா ஊற்றமுன் தோசைக்கல் நல்லெண்ணெய் சேர்த்துத் துடைக்கப்படல் வேண்டும்.





### சண்டி / லச்ச கொட்டக்கீரை

**Botanical Name - Pisonia Grandis**

யாழ்ப்பாணத்தில் பொதுவாக காணப்படக்கூடிய சிறிய மரம்.

இக்கீரை வாரத்தில் 3 நாட்கள் பச்சடியாகவோ கீரையாகவோ கடைந்து சாப்பிட இரத்தம் விருத்தியாகி இரத்தசோகை நோய் தணியும். இக்கீரையுடன் வெள்ளாட்டு (கறுப்பு நிற நீண்ட செவியுள்ள) இரத்தம் சேர்த்து வறுத்து சாப்பிட தசைப்பிடிப்பு, மூச்சுப்பிடிப்பு குணமாகும். இக்கீரையை பொடியாக அரிந்து புறா இரத்தத்துடன் வறுத்து சாப்பிட பக்கவாதத்திற்கு சிறந்தது.

இடுப்புவலி, கழுத்துவலி உடையவர்கள் தொடர்ந்து 21 நாட்கள் சண்டிக்கீரையை சாப்பிட்டுவர மேற்படி வலிகள் தணியும்.

100 கிராம் கீரையிலுள்ள சத்துக்கள்

புரதம்:- இளம் இலை- 3.1 கிராம், முதிர்ந்த இலை - 5.1 கிராம், கொழுப்பு - இளம் இலை - 0.2 கிராம், முதிர்ந்த இலை - 0.4 கிராம், நார்ச்சத்து - இளம் இலை - 0.6 கிராம், மாப்பொருள் - இளம் இலை - 3.2 கிராம், முதிர்ந்த இலை - 10.2 கிராம், கல்சியம் - இளம் இலை - 170 மி.கிராம், முதிர்ந்த இலை - 320 மி.கிராம், பொஸ்பரஸ் - இளம் இலை - 60 மி.கிராம், முதிர்ந்த இலை - 80 மி.கிராம், இரும்பு - இளம் இலை - 3.6 மி.கிராம், முதிர்ந்த இலை - 2.6 மி.கிராம், தயமின் - இளம் இலை - 0.03 மி.கிராம், ரைபோ பிளேவின் - இளம் இலை - 0.11 மி.கிராம், நியாமின் - இளம் இலை - 0.20 மி.கிராம்.

### சண்டிக்கீரை சூப்

- சண்டிக்கீரை அரைத்தது - 1 கப்
- தேங்காய் துருவல் - 1 மூடி
- பெருஞ்சீரகம் - 1தேக்கரண்டி
- கராம்பு - 2
- கசகசா - 1 தேக்கரண்டி
- ஏலக்காய் - 2
- துவரம் பருப்பு - 50 கிராம்
- காடி நீர் - 2 1/2 கப் சிவத்தப்பச்சரிசி கழுவிய நீர்
- சின்னவெங்காயம் - 1 கைப்பிடி
- தக்காளி - 3
- மல்லி - 4 தேக்கரண்டி
- உப்பு - தேவையான அளவு
- எலுமிச்சை - 1
- மிளகு - 1 தேக்கரண்டி
- பசுநெய் - 4 தேக்கரண்டி
- பூண்டு - 4 பல்
- இஞ்சி - 1 துண்டு
- கறிவேப்பிலை - தேவையான அளவு

தேங்காய் துருவல், பெருஞ்சீரகம் இரண்டையும் நன்கு அரைத்து காடிநீர்விட்டு கரைத்து ஊற்றவும். வெந்தயத்தை அதனுள் இட்டு உப்பு சேர்க்கவும். தக்காளியை சேர்த்து துவரம் பருப்பையும் வேகவைத்து கடைந்து அதனுள் போடவும்.

கீரையை போட்டு வேகவிடவும். வாணலியில் நெய்விட்டு பெருஞ்சீரகம், கசகசா சேர்த்து வறுத்து, பூண்டைத் தட்டிப் போட்டு இஞ்சியும் இட்டு வதக்கி வெங்காயம் போட்டு தக்காளி, கறி வேப்பிலை என்பவற்றை போட்டு கொதிக்கவிட்டு இறுதியாக தேசிப்புளி ஊற்றி மிளகு தூள் போட்டு நன்கு கலக்கி பயன்படுத்தலாம். உடற்சூடு, வயிற்றுப்புண், வாய்ப்புண் தீரும். நல்ல ஜீரணசக்தி உண்டாக்கும். உடலின் நோய் எதிர்ப்பாற்றலையும் அதிகரிக்கும்.

(தொடரும்)

# வடமாகாணத்தில் அரச திணைக்களங்களினால் காணிகள் கையடக்கலும் மக்களின் காணிப் பிரச்சினையும் - ஒரு பார்வை

**01**

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஒய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



### நிலப் பயன்பாடு

ஒருபுறம், நில பயன்பாட்டுச் சட்டங்களும் கொள்கைகளும் நிலத்தில் கொள்கை வகுப்பாளர் காட்டிய அணுகுமுறையை பிரதிபலிக்கின்றன. மறுபுறம் நிலம் தொடர்பான சட்டங்களும் கொள்கையும் அதன் மீதான மக்களின் மனப்பான்மையை பிரதிபலிக்கின்றன. இந்த இரண்டு உச்சநிலைகளுக்கும் இடையிலான சமநிலை இழக்கப்படும்போது. நிலப் பயன்பாடு தொடர்பான பிரச்சினைகள் எழுகின்றன. முதல் கட்டத்தில், சமூக மற்றும் பொருளாதார இயல்புடைய பிரச்சினைகள் தீர்க்கப்படாது இருக்கும் போது அது பின்னர் சிக்கலான சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளாகின்றன. எனவே நிலம் தொடர்பான தற்போதைய பிரச்சினைகள் இந்த அடித்தளத்தில் இலங்கை அரசினால் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டியது முக்கியமானது ஒன்றாகும்.

> **காணிப் பிரச்சினைகள் போன்ற சமூக மற்றும் பொருளாதார இயல்புடைய பிரச்சினைகள் தீர்க்கப்படாது இருக்கும் போது அது பின்னர் சிக்கலான அரசியல் பிரச்சினைகளாக மாறுகின்றன.**

இலங்கையின் நிலப் பயன்பாட்டு' பிரச்சினை பொருளாதார, சமூக மற்றும் அரசியல் காரணிகளுடன் தொடர்புடையது என்பது பொதுவாக எல்லோருக்கும் தெரிந்தது ஒன்று.

இந்தப் பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, 1930 களில் இருந்து இலங்கை அரசு, காணி சம்பந்தமாக பல்வேறு கொள்கைகள் / சட்டங்கள் மூலம் தலையிட்டு குடியேற்றத் திட்டங்கள், கிராமங்களை விரிவுபடுத்துதல், நடுத்தர வர்க்கத்திற்கு நிலத்தை வழங்கல், சிறப்பு அனுமதிகள் மூலம் நிலத்தை வழங்கல், அத்துமீறல் குடியேற்றங்களை முறைப்படுத்துதல், மேட்டுநில குடியேற்றங்களைச் செய்தல், இளைஞர்களுக்கு குடியேற்றத் திட்டங்களை உருவாக்கல் போன்ற பல திட்டங்களைச் செயற்படுத்தியது.

இருப்பினும், கிராமப்புறத் துறையில் பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான மேற்கண்ட முயற்சிகள் மூலம் செய்யப்பட்ட பங்களிப்புகள் திருப்திகரமாக அமையவில்லை. அத்துடன் இச்செயல்முறை இனங்களுக்கு இடையே பல குழப்ப நிலைகளைத் தோற்றுவித்துள்ளன. மேற்கூறிய செயல்முறைகள் இன்னும் மத்திய அரசால் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதால் அவை மாகாணத்திற்கான கொள்கைகள் பிராந்திய தேவைகளை போதுமான அளவில் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்பதையே அர்த்தப்படுத்துகின்றன. இதனைப் பார்க்கும் போது தலைநகரில் இருந்து மத்திய திட்டமிடல் என்பது பிராந்திய பன்முகத்தன்மையின் அடிப்படையில் சில சிக்கல்களை தீர்க்க முடியாது என்பதை தெளிவாகக் காட்டுகிறது.

> **பல கொள்கைச் செயல்முறைகள் இன்னும் மத்திய அரசால் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதால் அவை மாகாணத்திற்கான கொள்கைகள் மற்றும் பிராந்திய தேவைகளை போதுமான அளவில் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்று அர்த்தப்படுத்துகின்றன.**

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் 1987 ஆம் ஆண்டில் மாகாண சபைகளுக்கு நிலத்தின் அதிகாரங்களை வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டது என்றாலும், பல கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது. மேலும் நிலம் தொடர்பான பல அதிகாரங்கள் மாகாணத்திற்கு பகிராது மத்திய அரசால் இன்னும் முழுமையாக தக்கவைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் நில உரிமைப் பிரச்சினை நாட்டின் பிற அரசியல், பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகளில் மிகவும் சிக்கலான மற்றும் குழப்பமான பிரச்சினையாக தற்போது மாறியுள்ளது. ஒருபுறம், இது முழு நாடும் எதிர்கொள்ளும் ஒரு சிக்கலான பொருளாதார மற்றும் சமூக பிரச்சினை.

மறுபுறம், அது தனி மாநிலத்தை கோரும் அளவுக்கு சென்றிருந்தது. தற்போதுள்ள இந்த இரண்டு பிரச்சினைகளுக்கும் ஒரு முக்கிய காரணம், நாட்டின் மிகப்பெரிய நில உரிமையாளராக மாகாணம் உள்ள போதும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் அரசு காட்டுகின்ற மெத்தனமான போக்காகும்.

மாகாண சபை அமைப்பு சீராகவும் அர்த்தமுள்ளதாகவும் செயற்பட வேண்டுமானால், சட்டரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் சட்டத்தில் உள்ள இடைவெளி நிரப்புவதற்கு ஒரு மையப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பிலிருந்து ஒரு பரவலாக்கப்பட்ட நிலைக்கு மாறுவதை உறுதிசெய்வது முக்கியமாகும். மக்களின் முக்கிய குறைகளைத் தீர்ப்பதற்கு பல்வேறு இன-கலாசார குழுக்களிடையே அதிகாரப் பகிர்வுக்கான வழிமுறையைத் திட்டமிடவேண்டும், மாகாண சபை அமைப்பின் அனைத்து குறைபாடுகளையும் கொண்ட தற்போதைய நிலை அத்தகைய நம்பிக்கைக்கு உத்தரவாதம் அளிக்கவில்லை.

அரசு நிலம் தொடர்பான அதிகாரப் பகிர்வு விவாதத்திற்கு இரண்டு முக்கிய விடயங்கள் உள்ளன. முதலாவது, பிராந்திய அலகுகளுக்கு பிராந்தியத்தில் அரசு நிலங்களை கட்டுப்படுத்தவும் நிர்வகிக்கவும் அதிகாரம் வழங்கப்படுவது. இரண்டாவதாக, இவை யதார்த்தமாக இருக்க, மையத்தில் பல சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதன் தேவை பெரும்பாலும் இவை இரண்டு விடயங்களும் அரசினால் பின்பற்றப்படுவதாக தெரியவில்லை.

> **தற்போது வடமாகாணத்தில் பல விதமான காணிப்பிரச்சினைகள் இருக்கின்றன. தனியாருக்கு இடையேயுள்ள தனியார் காணிப் பிரச்சினைகள், தனியார் காணிகளை படைத் தரப்பினர் கையடக்கி வைத்திருப்பதால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் இது போன்ற பல பிரச்சினைகளைக் கூறலாம்.**

தற்போது வடமாகாணத்தில் பலவிதமான காணிப் பிரச்சினைகள் இருக்கின்றன. தனியாருக்கு இடையேயுள்ள தனியார் காணிப் பிரச்சினைகள், தனியார் காணிகளை படைத்தரப்பினர் கையடக்கி வைத்திருப்பதால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் இது போன்ற பல பிரச்சினைகளைக் கூறலாம்.

> **இக் கட்டுரையில் அலசப்படுவது சுண்டிக்குளம் தேசிய வனத்திற்காக தனியார் காணிகளை வனஜீவராசி பாதுகாப்பு திணைக்களம் (Department of Wildlife Conservation) கையடக்கப்படுத்தியதால் ஏற்பட்டுள்ள பிரச்சினை, நெடுந்தீவு தேசிய பூங்கா பிரச்சினை, தொல்பொருள் திணைக்களம் கையடக்கப்படுத்த இருக்கும் காணிகளால் ஏற்படப் போகின்ற பிரச்சினை, வனத்திணைக்களம் காணிகளை கையடக்கப்படுத்தியதால் ஏற்பட்ட பிரச்சினை போன்றவை பற்றி மட்டுமே.**

இக் கட்டுரையில் அலசப்படுவது சுண்டிக்குளம் தேசிய வனத்திற்காக தனியார் காணிகளை வன ஜீவராசி பாதுகாப்பு திணைக்களம் **(Department of Wildlife Conservation)** கையடக்கப்படுத்தியதால் ஏற்பட்டுள்ள பிரச்சினை, நெடுந்தீவு தேசிய பூங்கா பிரச்சினை, நாகர்கோவில் இயற்கை ஒதுக்கீட்டுப் பிரச்சினை, தொல்பொருள் திணைக்களம் கையடக்கப்படுத்த இருக்கும் காணிகளால் ஏற்படப் போகின்ற பிரச்சினை, 'வனத்திணைக்களம் காணிகளை கையடக்கப்படுத்தியதால் ஏற்பட்ட பிரச்சினை போன்றவை பற்றி மட்டுமே.

வடமாகாண மக்களின் காணிப்பிரச்சினை பற்றி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 2018இல் பின்வருமாறு கூறியிருந்தார். "படைகளின் ஆக்கிரமிப்பு என்கின்றபோது, எமது மக்களின் சொந்த காணி, நிலங்கள், பொருளாதார கேந்திர இடங்கள், பொருளாதார முயற்சிகளுக்கான வாய்ப்புகள் என்பன அடங்குகின்றன. அரச திணைக்களங்கள் என்கின்றபோது, வனப் பாதுகாப்புத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை என்பன எமது மக்களின் காணி, நிலங்கள் மற்றும் வணக்க வழிபாட்டுத்தலங்கள் உள்ளிட்ட பொருளாதார முயற்சிகளுக்கான வளப் பகுதிகளையும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன.

தொல்பொருள் திணைக்களம் என்பது வடக்கு, கிழக்கு மக்களுக்கு இன்று தொல்லை தரும் திணைக்களமாக மாறிவிட்டுள்ளது. இத் திணைக்களத்தினர் கூறுவதைப் பார்க்கப்போனால், இந்த நாட்டில் இன்னும் குறுகிய காலத்திற்குள் மக்கள் எவருமே வாழ முடியாத நிலை ஏற்பட்டு, வெறும் தொல் பொருட்கள் மட்டுமே அடங்கிய நாடாக இது மாறி விட்டாலும், ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை என்றே தோன்றுகின்றது."

இதேபோல் தமிழ்த் தேசியபசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சபாலிங்கம் அரங்கில் 2018-10-20ஆம் திகதி சூழல் அரசியலும் நில அபகரிப்பும் என்ற கருப்பொருளில் உரையரங்கு ஒன்று நடைபெற்றது. இங்கு உரையாற்றிய பொ.ஐங்கரநேசன் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"ஆயுதப்போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பிறகு அரசு, வனவளத் திணைக்களத்தின் மூலமும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் மூலமும் புதிது புதிதாக எமது பூர்வீக நிலங்களைக் கையகப்படுத்தி வருகிறது. வனவளத் திணைக்களம் 2012ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏறத்தாழ இரண்டு இலட்சம் ஹெக்டெயர் நிலப்பரப்பை இதுவரையில் அபகரித்து வைத்திருக்கிறது.

(தொடரும்...)

# வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரச வங்கிகள் நேரடியாக பங்களிக்க வேண்டும்

## ஜனாதிபதி கோட்டா வேண்டுகோள்

(கொழும்பு)

**வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அரச வங்கிகள் நேரடியாகப் பங்களிக்க வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்தார்.**



அரசாங்கமொன்றின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறையை வகுக்க வேண்டியது அரச வங்கிகளின் பொறுப்பாகும்.

அதனை விளங்கி பொருளாதாரத்தை செயற்றிறனாகப் பேணுவதற்கான மூலோபாயத்தை முன்கொண்டு செல்வது வங்கிகளின் முக்கிய பொறுப்பாகுமென்றும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

இலங்கை வங்கியின் செயலாற்றுகை மீளாய்வு தொடர்பான கூட்டமொன்று நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

கடனுக்காக 2 இலக்க வட்டியை அறவிடுவதன் மூலம் நாட்டின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியாது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அதனை ஒரு தனி இலக்கமாக குறைந்த பெறுமானத்திற்குக் கொண்டுவந்து அபிவிருத்திக்கு உதவ வேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டினார்.

தனது உறவினர்களுக்கு, நண்பர்களுக்கு அல்லது தனக்கு உதவியவர்களுக்கு கடன் வழங்குமாறு ஒருபோதும் தான் வங்கிகளுக்குக் கூறவில்லை என்றும் விவசாயிகள் முதல் சிறிய, நடுத்தரத் தொழில் முயற்சியாளர்களும் முதலீட்டாளர்களும் எதிர்பார்க்கும் நிதி உதவிகளை வழங்குவதற்கு அரச வங்கிகள் முன்னணியில் இருக்க வேண்டுமென்றும் சுட்டிக் காட்டினார்.

இன்றுள்ள நிலைமைக்கு உலகின் எந்தவொரு நாடும் இதுவரையில் முகங்கொடுக்கவில்லை.

இதிலிருந்து எப்படி விடுபடுவது என்பது பற்றி பழைய முறைமைகளிலிருந்து விலகி சிந்திக்க வேண்டும்.

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது பாரம்பரிய முறைமைகளின் ஊடாக மட்டும் செய்ய முடியாதென்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

கொவிட்-19 நோய் தொற்றுடன் வீழ்ச்சியடைந்த உலகப் பொருளாதார சூழலில் அது மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த அனைத்து விடயங்களையும் விளங்கிக்கொண்டு நாட்டின் பொருளாதார புத்தெழுச்சிக்காக அரசின் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு உதவுவது அரச வங்கிகளின் பொறுப்பாகுமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (ஜ-4)

## ஆழிகளில் தொடுகை இல்லாமல் மின் பாவனையை கட்டுப்படுத்தும் நவீன தொழில்நுட்ப முறை

## மாணவன் சாதனை



(கொழும்பு)

ஸ்மாட் கையடக்க தொலைபேசி **(SMART Hand Phone)** ஊடாக மின்பாவனையை கட்டுப்படுத்தும் நவீன தொழில்நுட்ப முறையை பாடசாலை மாணவன் கண்டுபிடித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் உயர்தர தொழில்நுட்ப பிரிவில் கல்விகற்று வரும் அப்துல் லத்தீப் அஹமது யமீன் என்ற மாணவனே இந்த புதிய தொழில்நுட்ப முறையை கண்டு பிடித்து சாதனை புரிந்துள்ளார்.

வீடுகள், அரச மற்றும் தனியார் அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் மின்குமிழ்கள் மற்றும் இதர மின் பாவனைப் பொருட்களை கையடக்க தொலைபேசி ஊடாக தூரத்தில் நின்றவாறே இலகுவாக **On, Off** செய்து கொள்ள முடியும்.

இந்த தொழில்நுட்பமுறையானது குறைந்தளவிலான மனிதவலு மற்றும் குறைந்த நேரத்தில் கூடுதலான பயன்பாட்டை பெறக்கூடியதாக உள்ளது.

தற்போது கொரோனாத் தொற்று நோய் அச்சம் ஏற்பட்டுள்ளதால் மின் ஆழிகளில் கைவிரல்களின் தொடுகை இல்லாமல் தமது கையடக்க தொலைபேசிகள் ஊடாக இலகுவாக மின் ஆழிகளின் கட்டுப்பாட்டை மேற்கொள்ள முடியும் என குறித்த மாணவன் தெரிவித்தார்.

அரசாங்கம் மற்றும் விஞ்ஞான புத்தாக்க ஆணைக்குழுவும் தனது கண்டுபிடிப்புக்கான அங்கீகாரத்தை வழங்குவதன் ஊடாக இந்தப் புதிய தொழில்நுட்ப முறையை மேலும் விஸ்தரிக்க முடியும் என்றும் மாணவன் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## அர்ஜூன் அலெக்ஸ்சான்டரானார்

(கொழும்பு)



முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தனது பெயரை "ஹர்ஜன் அலெக்ஸ்சான்டர்" என மாற்றியுள்ளதாக சட்டமா அதிபர் விசேட நீதாய மேல் நீதிமன்றம் முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளார்.

அர்ஜுன் மகேந்திரன் மீது கடந்த 2015 ஆம் ஆண்டில், தனது மருமகனுக்கு சொந்தமான நிறுவனம் ஒன்றுக்கு சட்டவிரோதமான முறையில் திறைசேரி பத்திரங்களை அனுப்பியதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்நிலையில் அவர் தனது பெயரை ஹர்ஜன் அலெக்ஸ்சான்டர் என மாற்றிக் கொண்டார்.

இதனால் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பத்திர ஏலங்களின்போது குறைவான வட்டி விகிதத்தில் பெற விருப்பம் தெரிவித்த முதலீட்டாளர்களைத் தவிர்த்து விநியோகிக்கப்பட்டதன் விளைவாக, ஒட்டுமொத்தமாக அரசாங்கத்துக்கு சுமார் 1.6 பில்லியன் ரூபாய்க்கும் மேலதிக நட்டம் ஏற்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

இதனை அடுத்து அன்றைய தினத்தில் மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த அர்ஜுன் மகேந்திரன் மோசடி குறித்த கோப் குழுவின் அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முதல் நாள் அதாவது 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி நாட்டைவிட்டு வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## பாதாளக்குழு உறுப்பினர்கள் பூஸா சிறைக்கு மாற்றம்

(கொழும்பு)

பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பாதாள உலகக் குழுத் தலைவர்கள் பூஸா சிறைச்சாலைக்கு மாற்றப்படவுள்ளனர். இதன்படி நேற்று முன்தினம் ஒரு தொகுதி கைதிகள் வேறு சிறைகளிலிருந்து பூஸா சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

தொலைபேசி அழைப்புக்களை மேற்கொள்வதனை தடுக்கும் வகையில் அதிநவீன ஜாமர் இயந்திரங்கள் பூஸா சிறைச்சாலையில் நிறுவப்பட்டுள்ளன.

களுத்துறை, வெலிக்கடை, அங்குனுகொலபெலஸ்ஸ உள்ளிட்ட சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் இவ்வாறு பூஸா சிறைச்சாலைக்கு மாற்றப்படுகின்றனர்.

சிறைச்சாலைகளிலிருந்து மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்களை தடுத்து நிறுத்தும் நோக்கில் இந்த கைதிகள் பூஸாவிற்கு மாற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# ஒரு மாகாணத்திற்கு மாத்திரம் ஜனாதிபதி செயலணி எதற்கு?



## அமெரிக்கத் தூதுவர் அலைனா ஐயம்

(வோஷிங்டன்)

**ஒரு மாகாணத்திற்கு மாத்திரம் ஜனாதிபதி செயலணி எதற்கு என மக்கள் எழுப்புகின்ற சந்தேகங்கள் தனக்கும் இருப்பதாக அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.**

குறித்த விடயம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிழக்கு மாகாண தொல்பொருள் விடயங்களை ஆராய நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசேட செயலணி மக்களினால் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் பன்முகத்தன்மை அற்றதாகவும் தெரிகின்றது.

ஏன் இவ்வாறு ஒரு பகுதிக்கு மட்டும் தொல்பொருள் செயலணி நியமிக்கப்பட வேண்டும். எனச் சந்தேகம் எனக்குள்ளும் எழுகின்றது.

ஜனநாயகத்திற்கு எப்போதும் சிவில் நிர்வாகமே முக்கியத்துவமிக்கதாக அமையும்.

அத்துடன் இலங்கையானது 30-1 ஜெனிவா பிரேரணையிலிருந்து விலகினாலும் மனித உரிமை மீறலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொறுப்புக்கூறல் மூலம் நீதியை நிலைநாட்டுவதில் தனது கடமையை நிறைவேற்றும் என்று நம்புகின்றோம்.

இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையிலான உறவில் எந்தப் பிரச்சினையுமில்லை. இலங்கைக்கு வந்த தூதரகப் பணியாளர் தொடர்பான தவறான தகவல், தூதரகத்துக்கு அருகில் நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்டம் மீதான பொலிஸ் நடவடிக்கை என்பன இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவைப் பாதிக்கவில்லை.

அத்துடன் எம்.சி.சி. உடன்படிக்கை தொடர்பில் விரைவில் இணக்கத்திற்கு வர முயற்சிக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)



# கைத்தறி மற்றும் பற்றிக் துணிகளின் இறக்குமதியை நிறுத்தத் தீர்மானம்

## ஜனாதிபதி கோட்டா நடவடிக்கை

(கொழும்பு)

கைத்தறி மற்றும் பற்றிக் துணிகள் இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

துணி மற்றும் ஆடைத் தொழிற்றுறையினர் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படுகின்ற துணிகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற ஆடைகளுக்குப் பதிலாக உள்நாட்டு துணிகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்ற ஆடைகளின் சந்தை வாய்ப்புக் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கைத்தறி மற்றும் பற்றிக் துணிகள் இறக்குமதி செய்வதை நிறுத்துவதன் மூலம் பாரிய அளவில் அந்நியச் செலாவணியை குறைத்துக் கொள்ள முடியும் என்றும் பாடசாலை மற்றும் ஏனைய சீருடைகளுக்காக உற்பத்தி செய்யப்படுகின்ற துணிகளின் தரம் சிறந்ததாக இருக்க வேண்டும் என்றும் இதன்படி, இது தொடர்பில் ஆராய்வதற்கு மேற்பார்வைக் குழுவொன்றை அமைப்பதற்கும் தீர்மானித்துள்ளதாகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார். (ஜ-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2051

### தபோதரன்




### செல்வா




### கொங்காதரன்




### கனிமொழி




### தமிழினி




### சோபா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஜனாதிபதியின் நோக்கங்களை செயற்படுத்தும் பாராளுமன்றம் நிச்சயம் ஸ்தாபிக்கப்படும்

## பொதுஜன பெரமுன திட்டவட்டம்

(கொழும்பு)

**21 தேர்தல் மாவட்ட தொகுதி அமைப்பாளர்களை உள்ளடக்கிய தேர்தல் பிரசாரக் கூட்டம் அடுத்த மாதம் இடம்பெறும். எமது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்து கொள்வார் என்றும் ஜனாதிபதியின் நோக்கங்களை செயற்படுத்தும் பாராளுமன்றம் நிச்சயம் ஸ்தாபிக்கப்படும் என்றும் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**



பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், .

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசார கூட்டங்கள் சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களை பின்பற்றி நடத்தப்படும். குருநாகல், கம்பஹா ஆகிய பிரதேசங்களில் பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுன ஜனாதிபதித் தேர்தலில் கடைப்பிடித்த புதிய தேர்தல் பிரசார நடவடிக்கைகளையே பொதுத் தேர்தலிலும் கடைப்பிடிக்கும். சுற்றாடல் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. 21 தேர்தல் மாவட்டங்களில் உள்ள தொகுதி அமைப்பாளர்களை ஒன்றிணைத்து பாதுகாப்பான தேர்தல் பிரசார கூட்டம் அடுத்த மாதம் நடத்தப்படும். இக்கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்து கொள்வார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைத் திட்டங்களை செயற்படுத்தும் நிலையான அரசாங்கம் தோற்றம் பெறுவது அவசியமாகும். ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு உண்டு. எதிர்தரப்பினர் அரசியல் ரீதியில் பலவீனமடைந்துள்ளார்கள். நடப்பு நிலவரங்களை கருத்தில் கொண்டு மக்கள் சிறந்த தீர்மானத்தை எடுப்பார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# எதிர்வரும் பொதுத்தேர்தலில் மக்கள் அரசியல் ரீதியான தீர்மானத்தை எடுப்பார்கள்

## திலும் அமுனுகம நம்பிக்கை




(கொழும்பு)

பொதுத்தேர்தலை தொடர்ந்து பிறிதொரு கட்சியுடன் கூட்டணியமைத்து அரசாங்கத்தை தோற்றுவிப்பது எமது நோக்கமல்ல.

நல்லாட்சியின் பலவீனத் தன்மையினை கருத்தில் கொண்டு மக்கள் அரசியல் ரீதியான தீர்மானத்தை எடுப்பார்கள் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெரும்பான்மை மக்களின் ஆதரவுடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பலமான அரசாங்கத்தை ஸ்தாபிக்கும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைப்பதற்கான நடவடிக்கைகளே முன்னெடுக்கப்படுகின்றன.

அரசியலமைப்பு ரீதியான முரண்பாடுகள் நாட்டின் அனைத்துத் துறைகளிலும் தாக்கம் செலுத்தியுள்ளது.

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டே பெரும்பாலான மக்கள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தெரிவு செய்தனர். ஜனாதிபதியின் திட்டங்களை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஆகவே ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படும் நிலையான அரசாங்கம் தோற்றம் பெறுவது அவசியமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# 5 மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுகள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிப்பு

(கொழும்பு)

5 மாவட்டங்களுக்குரிய வாக்குச் சீட்டுக்கள் முதல் கட்டமாக அச்சிடப்பட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அச்சகத் திணைக்கள தலைவர் கங்கானி லியனகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அநுராதபுரம், பொலநறுவை, மாத்தளை, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுக்கள் தற்போது தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும் 4 மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுக்கள் எதிர்வரும் இரு தினங்களில் தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

ஏனைய மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுக்களை விரைவில் அச்சிட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அச்சகத் திணைக்களத்தலைவர் கங்கானி லியனகே தெரிவித்தார். (ஜ-2-8)

# செய்தித்துளிகள்

## சிறைக்குள் போதைப் பொருள் கொண்டு சென்றவர் கைது

(கொழும்பு)

வாரியபொல சிறைச்சாலைக்குள் தடைசெய்யப்பட்ட பொருட்களை மிகவும் சூட்சுமமாகக் கொண்டு செல்ல முயற்சித்த நபரொருவர் கணையவத்த பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேக நபரிடமிருந்து 5 ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசிகளும், 5 சார்ஜர்களும், 2 கிராம் 5 மில்லிகிராம் ஹெரோயினும், 2 கிராம் புகையிலையும், மதுபானப் போத்தலொன்றும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-8)

## பொலிஸ் அதிகாரி பலி; சந்தேக நபருக்கு மறியல்

(கொழும்பு)

கொழும்பு தும்முல்லை சந்தியில் அரச புலனாய்வுத் துறையின் பொலிஸ் அதிகாரியொருவரை விபத்துக்குள்ளாக்கி உயிரிழக்கச் செய்த டிபெண்டர் வாகனத்தை செலுத்திய நபரை நாளை மறுதினம் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதவான் எஸ்.பிரபாகரனால் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு தும்முல்லை சந்தியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர் மீது டிபெண்டர் மோதியதில் ஒரு பொலிஸ் அதிகாரி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

## 153 இந்தியர்கள் தாய் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா தாக்கம் காரணமாக தமது நாட்டுக்கு திரும்ப முடியாமல் நாட்டில் தங்கியிருந்த 153 இந்தியர்கள் விசேட விமானம் மூலம் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்திய விமான சேவைக்கு சொந்தமான ஏ.எல் 1202 எனும் இலக்க விசேட விமானத்தின் மூலம், குறித்த அனைவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து இந்தியா நோக்கிப் பயணித்தனர்.

அத்துடன், இந்த விசேட விமானம் மூலம் முதல் தடவை இந்தியாவின் கொச்சின் விமான நிலையத்திற்கு 63 பேரும் இதனையடுத்து, இந்தியாவின் பெங்களூர் விமான நிலையத்திற்கு 90 பேரும் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை குறித்த அனைவரும் இந்தியாவில், விமான நிலையங்களுக்கு அருகில் உள்ள ஹோட்டல்களில் 7 நாட்களும், அதன் பின்னர் தமது வீடுகளில் 7 நாட்களும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படஉள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 140 | 120 |
| தக்காளி | 180 | 240 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 110 | 110 | 80 |
| கோவா | 160 | 120 | 130 | 160 |
| கரட் | 140 | 180 | 190 | 200 |
| பூசணி | 50 | 40 | 40 | 50 |
| புபோல் | 60 | 60 | 60 | 100 |
| வாழைக்காய் | 40 | 70 | 40 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 200 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 200 | 150 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 | 120 |
| பயற்றங்காய் | 60 | 100 | 60 | 80 |
| லீக்ஸ் | 140 | 160 | 160 | 200 |
| பீற்றூட் | 100 | 120 | 100 | 140 |
| கறிமிளகாய் | 80 | 80 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 250 | 320 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 200 |
| கத்தரிதமட்ளை | 100 | 60 | 80 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 25 | 40 | 30 |
| தேசிக்காய் | 400 | 400 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 60-50 | 40-60 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 250 | — |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 |
| ஜப்பான | 60 | 80 | 80 | 100 |

## பொது அறிவுத் தகவல்கள்

1.ஏலக்காயில் இருக்கும் எண்ணெயின் பெயர் என்ன?
வோலடைல்

2.உலகில் பூக்கள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
நெதர்லாந்து.


3.ஒட்டகச்சிவிங்கியின் கழுத்தில் எத்தனை எலும்புகள் உள்ளன?
ஏழு

4.பிறக்கும்போது குழந்தைகளுக்கு எத்தனை எலும்புகள் இருக்கும்?
330


5.தாஜ்மஹால் எந்தவகை மாபிளால் கட்டப்பட்டுள்ளது?
மக்ரானா.

6.பனிக்கட்டிகளின் மேல் வளரும் செடிகளின் பெயர் என்ன?
க்ரயோ பைட்ஸ்

## நிறந்தீட்டுவோம்



## வித்தியாசம் கண்டுபிடியுங்கள்




## பழமொழிகள்

- பத்துப் பேருக்குப் பல்குச்சி ஒருவனுக்குத் தலைச் சுமை.
- பனி பெய்தால் மழை இல்லை, பழம் இருந்தால் பூ இல்லை.
- எள்ளுக்கு ஏழு உழவு , கொள்ளுக்கு ஓர் உழவு.
- நாய் இருக்கிற இடத்தில் சண்டை உண்டு.
- பட்டுக் கோட்டைக்கு வழி கேட்டால், கொட்டைப் பாக்கு விலை சொல்லுகின்றாய்.
- இஞ்சி இலாபம் மஞ்சளில்.
- அகல உழுகிறதை விட ஆழ உழு.




# நல்ல நீதிபதி



ஓர் ஊரில் நீதிபதி ஒருவர் இருந்தார். அவர் பெயர் ஹம் மாஸ். அவர் ஆபிரிக்காவைச் சேர்ந்தவர். மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர்.

தான் பார்க்கும் பதவிக்காக அவர் அரசாங்கத்திடமிருந்து ஊதியமே வாங்கிக் கொள்ளவில்லை "எனக்கு ஊதியம் வேண்டாம்'' என்று அவர் கூறிவிட்டார்.

சரி...அப்படியானால் அவர் தன் குடும்பச் செலவுக்கு என்ன செய்தார்? இரவு நேரங்களில் புத்தகங்கள் எழுதுவார். அதை விற்று அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு தன் குடும்பத்தை நடத்தினார்.

வீட்டு வேலைக்கும் அவர் ஆள் யாரையும் வைத்துக் கொள்ளவில்லை. அவர் வீட்டில் இருப்பவர்களே ஆளுக்கு ஒரு வேலையைச் செய்துவிடுவார்கள்.

ஆற்றுக்குப் போய் தினமும் குடத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வரவேண்டியது இவருடைய வேலை. அவர் மக்கள் எந்த நேரத்தில் வந்தாலும் விசாரித்து தீர்ப்பு வழங்குவார். நடுராத்திரியில் வந்து கதவைத் தட்டினாலும் அலுத்துக் கொள்ள மாட்டார். மக்களுக்கு அவர் மீது மிகவும் மரியாதை.

அவருக்கு அந்த மாநிலத்தின் முதலமைச்சர் ஒரு பண முடிப்பைப் பரிசாகக் கொடுக்க முன் வந்தார். ஆனால் இவர் அதை வாங்க மறுத்துவிட்டார்.

"சரிங்க... உங்களுக்கு ஒரு உதவியாளரையாவது அரசு சார்பாக ஏற்பாடு செய்கிறேன்'' என்றார் முதலமைச்சர்.

"அதுவும் வேண்டாம்" என்று நீதிபதி கூறினார். ''சரி...ஒரு வேலையாளையாவது அனுப்புகிறேனே!" என்றார் முதலமைச்சர். நீதிபதி, "தேவையில்லை" என்று சொல்லிவிட்டார். ''நீங்கள் வெளியில் சென்று வருவதற்கு ஒரு வாகனம் ஏற்பாடு செய்யட்டுமா?'' என்று முதலமைச்சர் வினவினார்.

அதுவும் வேண்டாம் என்றார் நீதிபதி. ''நீதித்துறையில் நீங்கள் பல முக்கியமான பொறுப்புகளை வகிக்கிறீர்கள்...அதனால் அவை இரவு நேரத்தில் நீங்கள் நூல்கள் எழுதுவதற்குத் தடையாக இருக்கின்றன. எனவே அரசாங்க நிதியிலிருந்து ஒரு சிறு தொகையையாவது சம்பளமாக வாங்கிக் கொள்ளுங்களேன்'' என்றும் முதலமைச்சர் சொல்லிப் பார்த்தார்.

ஆனால் அதற்கும் நீதிபதி மசியாமல், ''நான் மக்களுக்குப் பணியாற்றுபவன். மக்கள் தொண்டுக்கு ஊதியமாக நான் எதையும் வாங்கிக்கொள்ள விரும்பவில்லை'' என்று உறுதியாகச் சொல்லிவிட்டார்.

முதலமைச்சர் பார்த்தார், "சரி.. இதற்கு மேலே இவரை வற்புறுத்தினால் இவர் இந்தப் பதவியிலேயிருந்து விலகினாலும் விலகிக் கொள்வார். ஒரு நல்ல நீதிபதியை நாம் இழந்து விடக்கூடாது" என்று நினைத்து பேசாமல் இருந்துவிட்டார்.

அந்த ஊரில் ஒருவர் ஆடு, மாடுகள் வைத்திருந்தார். அவைகளை அவர் ஓட்டிக் கொண்டு போய் புல்வெளியில் மேயவிடுவார். இவர் உட்கார்ந்து அவைகளைக் கவனிப்பதற்கு ஒரு நிழலான இடம் தேவைப்பட்டது.

அந்தப் புல்வெளிக்குப் பக்கத்தில் இருந்த ஒரு நடைபாதை ஓரமாக தன்னுடைய நண்பன் ஒருவனுடைய வீட்டிற்கு அருகில் ஒரு குடிசை போட்டுக் கொள்ளலாம் என்று இவர் ஏற்பாடு செய்தார்.

ஆனால் அதற்கு நண்பன் ஒப்புக்கொள்ளவில்லை. "இது நடைபாதை...இதில் குடிசை போடக் கூடாது" என்று அவன் தடுத்தான். அதனால் இரண்டு பேருக்கும் தகராறு வந்துவிட்டது. "சரி...இதற்கு மேலே நமக்குள் வம்பு வேண்டாம். பேசாமல் நீதிபதியிடம் சென்று முறையிடுவோம்'' என்று இருவரும் முடிவு செய்தார்கள்.

இரண்டு பேரும் நீதிபதியைத் தேடிச் சென்றார்கள். நீதிபதி யார்? என்று அவர்களுக்குத் தெரியாது.

நீதிமன்றத்தை நோக்கி அவர்கள் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். எதிரில் ஒருவர் தண்ணீர்க் குடத்தைச் சுமந்தபடி வந்து கொண்டிருந்தார்.

அவரிடம் இவர்கள் இருவரும் "இந்த ஊர் நீதிபதியைப் பார்க்க வேண்டும். இப்போது அவர் எங்கே இருப்பார்?" என்று வினவினார்கள்.

"நான்தான் நீதிபதி...உங்களுக்குள் என்ன பிரச்சினை? என்னிடம் சொல்லுங்கள்'' என்றார் அவர்.

"ஐயா வணக்கம். எங்கள் பிரச்சினையைச் சொல்கிறோம். ஆனால் நீங்கள் தண்ணீர்க் குடத்தைச் சுமந்து கொண்டு நிற்கிறீர்கள். அதைக் கொஞ்சம் கீழே இறக்கி வையுங்கள். அதன் பிறகு நிதானமாக நாங்கள் சொல்வதைக் கேளுங்கள்'' என்று இவர்கள் இருவரும் கூறினார்கள்.

அதற்கு அந்த நீதிபதி சொன்னார்...

"இது மக்கள் நடந்து போகும் நடைபாதை. அதனால் நான் வைத்திருக்கும் குடத்தை இங்கே இறக்கி வைத்து...இந்த வழியாகப் போகும் பொதுமக்களுக்கு இடைஞ்சல் கொடுக்க விரும்பவில்லை. ஆதலால் இந்தக் குடம் என்னிடமே இருக்கட்டும். நீங்கள் உங்கள் பிரச்சினையைச் சொல்லுங்கள்'' என்றார்.

அவர் சொன்னதைக் கேட்டதும் இவர்கள் இருவரும் "சரி, ஐயா... நாங்கள் போய் வருகிறோம்'' என்று கூறியபடியே புறப்பட்டார்கள்

"என்னங்க இது... உங்கள் பிரச்சினை என்ன என்று இன்னும் நீங்கள் என்னிடம் சொல்லவில்லை...அதற்கு நான் தீர்ப்பும் சொல்லவில்லை. அதற்குள் புறப்பட்டு விட்டீர்களே'' என்று நீதிபதி வினவினார்.

"நீங்கள் தீர்ப்புக்கூறி விட்டீர்கள். அதனால் தான் நாங்கள் புறப்பட்டோம்'' என்றார்கள் இவர்கள்.

உண்மைதானே தன் கையில் இருக்கும் தண்ணீர்க் குடத்தையே தரையில் வைக்க விரும்பாத அவர், நடைபாதையில் குடிசை போடுவதை எப்படி "சரி" என்று ஒப்புக் கொள்வார்?

அந்த ஆள் நீதிபதிக்கு நன்றி சொல்லிவிட்டு...தன் நண்பனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டானாம்.

''நீதியரசர்'' என்று நாம் சொல்கிறோம் அல்லவா? அதற்கு நல்ல ஓர் உதாரணம் நீதிபதி ஹம்மாஸ்!

யார் என்ன சொன்னாலும் சொல்லட்டும். நீ எதைச் சரியென்று நினைக்கிறாயோ அதில் துணிவுடன் ஈடுபடு. - சாரதா தேவியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாற்றானிடம் காசு கேட்பதைவிட என் இனத்திடம் கேட்பது மேல்

தருமபிரானையும் துரியோதனனையும் அழைத்த வேதவியாசர் நீவிர் இருவரும் இந்த மண்ணில் நல்லவர்களா தீயவர்களா இருக்கின்றனர் எனப் பார்த்து வாருங்கள் என்று அனுப்பி வைத்தார்.

சில நாட்கள் கழிய தருமரும் துரியோதனும் வியாசரைச் சந்தித்தனர்.

துரியோதனன் வியாச முனிவரைப் பார்த்து சுவாமி இந்த மண்ணில் எவரும் நல்லவர்கள் இல்லை. எல்லோரும் தீயவர்களே என்றான்.

துரியோதனனைத் தொடர்ந்து தருமர் வியாச முனிவரைச் சந்திக்கின்றார்.

சுவாமி ஊரெல்லாம் சென்றேன். எங்கும் நல்லவர்களே. தீயவர்கள் எவரையும் காண முடியவில்லை என்றார்.

தருமரும் துரியோதனனும் சந்தித்த மக்கள் கூட்டம் ஒன்றாயினும் அவர்கள் தொடர்பில் இருவரது கணிப்பும் வேறாக இருந்தது.

ஆக, மதிப்பிடுபவர் யார் என்பதைப் பொறுத்தே எல்லாம் அமைகிறது.

அண்மையில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தேர்தல் செலவுக்குப் பணம் தாருங்கள் என்று தமிழ் மக்களிடம் கேட்டிருந்தார்.

இது தொடர்பில், வழமையாக அவரை எதிர்ப்பவர்கள் சிலர் கடும் விமர்சனம் செய்கின்றனர்.

விமர்சனம் செய்வது அவரவர் உரிமையாயினும் விமர்சனம் என்பது சரிக்குச் சரியும் பிழைக்குப் பிழையும் இடுவதாக இருக்க வேண்டும்.

இதைவிடுத்து சரிக்குப் பிழையும் பிழைக்குச் சரியுமாக விமர்சனம் அமையும்போது அது அதர்மத்துக்கான விதைப்பாக மாறிவிடுகிறது.

உண்மையில் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தேர்தல் செலவுக்கு நிதி உதவி செய்யுங்கள் எனத் தமிழ் மக்களிடமே கேட்டார். இதில் என்ன தவறிருக்க முடியும்.

தேர்தல் செலவு என்பது கணிசமானது. இந்தத் தொகையை ஈடு செய்வதற்காக வெளிநாட்டுத் தூதுவராலயங்களில் நிதி உதவி பெறுகின்ற அரசியல் கட்சிகள் உண்டு.

அவ்வாறு வெளிநாடுகளிடம் நிதி உதவியைப் பெற்றால் அவர்களுக்குக் கட்டுப்பட வேண்டியதாக இருக்கும்.

தவிர, செல்வந்தர்கள் சிலரிடம் கையேந்தினால் அவர்கள் வழங்குகின்ற நிதிக்காக நாவிழக்க வேண்டி வரும்.

இந்த நிகழ்ச்சி நிரலிலேயே அநேகமான அரசியல் கட்சிகள் இயங்குகின்றன.

இதனால் அந்தக் கட்சிகள் ஊழல் செய்யவும் கையூட்டுப் பெறவும் விலை போகவும் நேரிடுகிறது.

இதன் காரணமாக எந்த மக்கள் தமக்கு வாக்களித்தார்களோ அவர்களுக்காகக் குரல் கொடுக்க முடியாத இக்கட்டான சூழ்நிலை உருவாகி விடுகிறது.

இங்குதான் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் எந்த மக்களுக்காகத் தான் அரசியலில் இறங்கினாரோ அந்த மக்களிடம் தேர்தலுக்காக நிதி உதவி கேட்பது நேர்மையான அரசியலின் அடிப்படை என்றே கருதப்படும்.

தூதுவராலயங்களிடமும் உச்ச இலாபம் உழைப்பவர்களிடமும் பணம் பெற்றுத் தேர்தலுக்குச் செலவிடுகின்ற கயமைத்தனத்தை விட,

நிதி குறைந்தவர் காசுகள் தாரீர் நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர் எனப் பாரதி கேட்டது போல, தேர்தல் செலவுக்காக சிங்களவர்களிடம் அல்ல! அமெரிக்காவிடம் அல்ல! தன் தமிழ் மக்களிடம் நீதியரசர் காசு கேட்டது மேலோர் செயலே.

மேலாக, இது சரியா? பிழையா? என்பதை எங்கள் தமிழ் மக்களே தீர்மானிக்கும் தகைமையுடையவர்கள்.

# தேர்தல் நெருங்கிவரும் சந்தர்ப்பத்தில் நாடு கட்டுப்பாட்டை இழந்து பயணிக்கிறது

## கிரியெல்ல சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நாடு கட்டுப்பாட்டை இழந்து பயணித்துக் கொண்டிருக்கிறது. 2015க்கு முன்னர் காணப்பட்ட ஆட்சி மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. இதற்கு பொதுத் தேர்தலில் மக்கள் சிறந்த பதிலை வழங்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில்அவர்மேலும் தெரிவிக்கையில், தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நாடு கட்டுப்பாட்டை இழந்து பயணித்துக் கொண்டிருக்கிறது. மக்களை பாதுகாப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் நாட்டையும் பாதுகாக்கவில்லை. மக்களையும் பாதுகாக்கவில்லை.

தற்போது இரண்டாம் அலை பற்றி வைத்திய நிபுணர்கள் கருத்துக்களை தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் அரசாங்கம் எவ்வாறு பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என்று எமக்குத் தெரியாது. கடந்த ஜனவரி 24 ஆம் திகதி விமான நிலையங்களை மூடுமாறு சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

எனினும் வேட்புமனு தாக்கல் செய்யும் வரை அரசாங்கம் அதற்கான எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

தற்போது அத்தியாவசியப் பொருட்களின் விலை எதிர்பார்க்காதளவிற்கு அதிகரித்துள்ளது.

அரசாங்கத்தால் நிவாரணங்கள் பற்றி பேசப்படுகின்றதே தவிர அவை வழங்கப்படுவதில்லை. மக்களிடம் காண்பிப்பதற்காக அறிக்கைகளை மாத்திரம் வெளியிடுகின்றனர். தற்போது காப்புறுதிகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு அரசாங்கம் கட்டுப்பாடற்று செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. தனிமைப்படுத்தல் சட்டம் சாதாரண மக்களுக்கும் தனவந்தர்களுக்கும் வெவ்வேறு முறையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தேர்தல் சட்டங்களும் முறையாகப் பின்பற்றப்படுவதில்லை. தேர்தலை நடத்துவதற்காக இல்லாமல் நடத்தாமலிருப்பதற்கான சட்டங்களே தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

தேர்தல்சட்டங்கள் தொடர்பில் அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாட வேண்டும். அவ்வாறு எந்த கலந்துரையாடலும் முன்னெடுக்கப்படவில்லை என அவர் மேலும் குற்றம் சாட்டினார். (ஜ-8)

## 4 பேருடன் மூழ்கிய படகு ஒருவர் உயிருடன் மீட்பு

(இராமேஸ்வரம்)

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்று மாயமான நான்கு மீனவர்களில் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டார்.

காணாமற்போன மூன்று மீனவர் குறித்து எந்த விதத் தகவலும் கிடைக்காததால் தென் கடலோர மீனவக் கிராமங்களில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கொரோனா மற்றும் மீன்பிடி தடை காலம் காரணமாக 83 நாட்களுக்கு பின் கடந்த சனிக்கிழமை இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து 622 விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர்.

இதில் இராமேஸ்வரத்தை சேர்ந்த ஹெட்ரோ என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் ரெஜின் பாஸ்கர், மலர், ஆனந்த், ஜேசு ஆகிய நான்கு மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்ற நிலையில் மாயமாகினர்.

இந்நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை புதுக் கோட்டை மாவட்டம் கோட்டைப் பட்டிணத்தைச் சேர்ந்த மீனவர்கள் மீன்பிடித்து விட்டு கரை திரும்பி கொண்டிருந்த போது நடுக்கடலில் மூன்று நாட்களுக்கு முன் மாயமான விசைப் படகில் உயிருக்கு போராடிய நிலையில் கடலில் யேசு என்ற மீனவரை மீட்டு சிகிச்சைக்காக மணல்மேல்குடி அரச வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

மேலும் இவருடன் மீன்பிடிக்க சென்று மாயமான மூன்று மீனவர்களை தேடும் பணியில் இந்திய கடலோர காவல் படையினர் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## ஜனாதிபதி ஆணைக்குழு விஜயதாஸவிற்கு அழைப்பு

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் இன்று முன்னிலையாகுமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் முன்னாள் சொலிசிட்டர் ஜெனரல் சுக்த கம்லத் ஆகியோருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

அவன்காட் நிறுவனத்தை அரசாங்கத்தின் கீழ் கொண்டு சென்றதன் காரணமாக நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதன் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதியினால் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாட்டின் அடிப்படையிலேயே அவர்களுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அவன்காட் நிறுவனம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும்ஜனாதிபதி ஆணைக்குழு 17 பேருக்கு நேற்று முன்தினம் அழைப்பாணை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

## பிரேசிலில் தாண்டவமாடும் கொரோனா ஒரேநாளில் 729 பேர் உயிரிழப்பு

(றியோடி ஜெனீரே)

பிரேஸிலில் நேற்று கொரோனா வைரஸ் தொற்றினால் 23 ஆயிரத்து 674 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 729 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டின் சுகாதார அமைச்சின் புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி, அங்கு 8 இலட்சத்து 91 ஆயிரத்து 556 பேர் மொத்தமாக வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். அத்துடன் 44 ஆயிரத்து 118 பேர் உயிரிழந்துள்ளனர். (ஜ-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** சாவகச்சேரி தபாலக வீதி, டச்சு வீதி கண்டுவில், அரசடி ஆசிரியர் வீதி, பெருங்குளம் சந்தி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** பொன்னாவெளி, பாலாவி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** சாளம்பைக்குளம் ஒரு பகுதி, பகல அளுத்வத்த கிராமம், பத்தினியார் மகிழங்குளம் கிராமம், தவசிகுளம் கிராமம், கிறிஸ்தவகுளம், இரட்டைப் பெரியகுளத்திலிருந்து பூ ஓயா வரை, ஈரப்பெரியகுளம் இராணுவ முகாம், SLBC ஈரப்பெரியகுளம் பூ ஓயா இராணுவ முகாம், Recbo North ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** ஓலைத்தொடுவாய், கூரை, அகத்திமோட்டை, கோவில்குளம், விடத்தல்தீவு, பள்ளமடு, சேது விநாயகன்குளம், பள்ளமடு இறால் பண்ணை, நெடுங்கண்டல் மொபிட்டல் தொலைத்தொடர்பு நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

சோம்பேறி இரண்டு முட்களும் இல்லாத கடிகாரம் போன்றவன். அது நின்றாலும் ஓடினாலும் பயனில்லை. -கூப்பர்

## ஆன்மீகச் சிந்தனைகள்

### இலட்சியத்துடன் வாழ்வோம்

- ❖ உள்ளத்தூய்மையோடு உணவருந்தினால் மனதில் நல்ல எண்ணம் உண்டாகும்.
- ❖ யானையைப் போல குளிக்கவும், தேனீயைப் போல உழைக்கவும் கற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ மனதால் செய்த பாவம் தியானத்தாலும், வாக்கால் செய்த பாவம் கடவுளைத் துதிப்பதாலும் நீங்கி விடும்.
- ❖ பயிருக்கு முள்வேலி இடுவது போல, தேடிய பணத்திற்கு ஒருவர் செய்த தர்மமே வேலியாகும்.
- ❖ மனிதன் இலட்சியத்துடன் வாழ வேண்டும். இலட்சியமில்லாத வாழ்க்கை மிருகநிலைக்கு ஒப்பாகும்.

# சிறைகளுக்குள் குற்றச்செயல்களை முடிவுக்குக் கொண்டு வரவே ஜனாதிபதி செயலணி

## பாதுகாப்புச் செயலர் கமால் கூறுகிறார்

(கொழும்பு)

**பாதாள உலகக் கும்பல்களின் செயற்பாடுகள், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள், போதைப்பொருள் கடத்தல் மற்றும் மிரட்டிப் பணம் பறித்தல் ஆகியவை சிறைச்சுவர்களுக்குள் இருந்து இயங்குகின்றன என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன குற்றஞ்சாட்டினார்.**


நேற்று கொழும்பில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அந்தத் தவறான செயல்களைக் கண்டறிவதற்கும் அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் ஒரு பாதுகாப்பான நாட்டையும் ஒழுக்கமான, சிறந்த மற்றும் சட்டபூர்வமான சமூகத்தை உருவாக்குவதற்காகவே ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டது என்று சுட்டிக்காட்டினார்.

மேலும் இந்தச் செயலணி அரச அதிகாரிகளைக் கட்டுப்படுத்த உருவாக்கப்பட்டது என்று சமூக வலைத்தளங்களில் வெளியான கருத்தை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மறுத்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதிக்குப் பின்னர் இலங்கையில் பதிவாகியுள்ள அனைத்து கொரோனா வைரஸ் தொற்று உறுதியான நோயாளிகளும் இலங்கை கடற்படை மற்றும் வெளிநாடுகளில் இருந்து திரும்பியவர்களே.



குறிப்பாக உள்ளூரில் கொரோனாத் தொற்று உறுதியானவர் அடையாளம் காணப்படுவதற்கு 40 நாட்களுக்கு முன்னரே குறித்த செயலணியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்தார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் ஜனாதிபதி இன்று விசேட சந்திப்பு

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் இன்றையதினம் விசேட சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலை நடத்துவதற்கு பொருத்தமான சூழ்நிலையை உருவாக்குவது குறித்து இதன்போது கலந்துரையாடவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.



ஆங்கில ஊடகமொன்றுக்கு நேற்று வழங்கிய செவ்வியொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்கள் மற்றும் அதன் செயலாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். வாக்குச் சீட்டுக்களில் வாக்களிப்பதற்கான நேரங்களைப்பகிர்விடுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வாக்குச்சாவடிகளில் ஒன்றுகூடுவதைத் தவிர்க்கும் வகையிலேயே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# கொரோனா தரப்படுத்தல் வரிசையில் இலங்கை 100 ஆவது இடத்தில்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவிய நாடுகளின் தரவரிசையில் இலங்கை 100 ஆவது இடத்தை பிடித்துள்ளது. இதற்கமைய நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 905 ஆகக் காணப்படுகின்றது.

இந்நிலையில் கொரோனா வைரஸ் பரவிய நாடுகளின் தரவரிசையில் அமெரிக்கா முதலாவது இடத்திலும் பிரேசில் இரண்டாவது இடத்திலும் ரஷ்யா மூன்றாவது இடத்திலும் இந்தியா நான்காவது இடத்திலும் பிரித்தானியா ஐந்தாவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# சிறை அதிகாரியின் வீட்டு வாசலில் துப்பாக்கி ரவைகள்



(கொழும்பு)

பூஸா சிறைச்சாலை அதிகாரியொருவரின் வீட்டுக்கு முன்பாக இனம்தெரியாத நபர்கள் 5 துப்பாக்கி ரவைகளை வீசிவிட்டுச் சென்றுள்ளனர். அந்த ரவைகளில் சிறைச்சாலை அதிகாரியின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

நேற்று அவர் கடமைக்கு புறப்படத்தயாராகி வீட்டுக் கதவை திறந்தபோது வாசலில் ரி-56 ரக துப்பாக்கி ரவைகள் காணப்பட்டன.

அண்மையில் பூஸா சிறைச்சாலையில் கஞ்சிபானை இம்ரானின் சிறைக்கூடத்தில் சோதனை நடத்தியதில் இந்த அதிகாரி முக்கிய பங்காற்றியிருந்தார். இந்தச் சோதனையின் போது 2 கைத்தொலைபேசிகள் மீட்கப்பட்டிருந்தன.

இதனால் கோபமடைந்த போதைப்பொருள் கடத்தல்காரர்கள் இந்த மிரட்டலை விடுத்திருக்கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ஜ-4)

# முதலாவது கூட்டத்தொடரின்போது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலின் பின்னர் ஒன்றுகூடவுள்ள முதலாவது நாடாளுமன்ற கூட்டத்தொடரின்போது, அனைத்து உறுப்பினர்களும் உள் நுழைவதற்கு முன்னர் பெரும்பாலும் பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படுகின்ற அனைத்து உறுப்பினர்களும் நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் முதலாவது கூட்டத் தொடரில் கலந்து கொள்ள வேண்டும். இந்நிலையில் ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணி அனைத்து உறுப்பினர்களையும் ஆசன அடிப்படையில் அமரவைப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக முதலாவது கூட்டத் தொடரின்போது, 225 உறுப்பினர்களும் சத்தியப்பிரமாணம் செய்தல், சபாநாயகர் மற்றும் பிரதி சபாநாயகர் உள்ளிட்டவர்களை தெரிவு செய்யும் நிகழ்வும் இடம்பெறும்.

இந்த நிலையில், நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் குறித்த நிகழ்வுகளுக்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் தனிப்பட்ட ரீதியில் பி.சி.ஆர்.பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டி வரும் எனவும் அவ்வாறு இல்லாத பட்சத்தில் அனைவரும் நாடாளுமன்றத்தில பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-8)

# பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களை மீளக் கையளிப்பதற்குத் தீர்மானம்

(கொழும்பு)

கொவிட்-19 தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக அமுலான ஊரடங்குச்சட்ட காலப் பகுதியில் பொலிஸாரால் பொறுப்பேற்கப்பட்ட வாகனங்களை மீள உரிமையாளர்களிடம் கையளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. அதற்காக உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கம் பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்மரத்னவுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## விபத்துக்குள்...

துள்ளார்.

இச்சம்பவத்தில் இராசையா தியாகராசா (வயது - 64) என்பவரே மரணமானவராவார்.

குறித்த முதியவர் மாங்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது மாட்டுடன் மோதியதில் விபத்து சம்பவித்தது.

விபத்தில் படுகாயமடைந்த முதியவர் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்றையதினம் அவர் மரணமடைந்தார். (ம-3,299)

## யாழைச் சேர்ந்த...

விபரீத முடிவெடுத்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் புத்தளத்தில் உயிரிழந்துள்ளார்.

இதில் தென்மராட்சி, மீசாலை வடக்கு, வேம்பிராய் பகுதியைச் சேர்ந்த நமசிவாயம் டயஸ் (வயது-26) என்பவரே உயிரிழுந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

புத்தளம் மாதம்பே பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் மரமொன்றில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நேற்று அதிகாலை குறித்த கான்ஸ்டபிளின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிலாபம் பதில் நீதவான் மற்றும் சிலாபம் பொது வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று ஆரம்ப கட்ட விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3,30,114)

## கதிரையிலிருந்து...

(வயது-3) என்ற சிறுவனே மரணமானவராவார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, அல்வாய்ப் பகுதியைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் கடந்த ஐந்து நாட்களுக்கு முன்பு வீட்டில் கதிரையில் இருந்தபோது தவறுதலாக கீழே விழுந்துள்ளான்.

சிறுவன் விழுந்ததை பெற்றோர்கள் பெரிதும் கவனத்தில் எடுக்காத நிலையில், குறித்த சிறுவனின் தலைப்பகுதி வீங்கி காதுப் பகுதிகள் வலிப்பதாக நேற்று முன்தினம் தனது பெற்றோரிடம் தெரிவித்ததையடுத்து பெற்றோர் சிறுவனின் தலைப் பகுதியை அவதானித்தனர். அத்துடன் சிறுவனுக்கு காய்ச்சலும் இருந்துள்ளது.

இதனால் பெற்றோர் நேற்று முன்தினம் நண்பகல் சிறுவனை மந்திகை ஆதார வைத்திய சாலையில் அனுமதித்தனர். அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட சிறுவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டான். எனினும் சிகிச்சையில் பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-3,8,114)

## யாழ்.மாநகர...

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு முன் பாக நேற்று பிற் பகல் 2 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் திருநகரைச் சேர்ந்த தீயணைப்புப் படை வீரரான அரியரட்ணம் சகாயராஜா (வயது-36) என் பரே உயிரிந்தவராவார்.

தீயணைப்பு வாகன முன் ரயர் வெடித்ததில கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகி தோட்டத்திற்குள் பாய்ந்துள்ளது.

சம்பவத்தில் தீயணைப்பு பணியில் ஈடு

படுபவர்கள் மூவர் படுகாயமடைந்தனர். அவர்கள் மூவரும் அம்புலன்ஸ் வண்டியில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்று கோப்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-3,8,18,101)

## 12 உறுப்பினர்கள்...

கிடையாது என கூறியுள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து ஆராய்வதற்கு கட்சியில் 12 உறுப்பினர்களைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் கடந்த காலத்தில் முரண்பட்ட போதும் இனிவரும் காலங்களில் முரண்பாடற்ற சிறுபான்மை கட்சி உறுப்பினர்களுடன் இணக்கமாகவே செயற்படுவோம் என்றும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஜனாதிபதி கோட்டா தலைமையிலான அரசின் மீது அழுத்தம் பிரயோகிக்க முடியாது.

எனவே புதிய அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கான தீர்வு எத்தரப்பினருக்கும் பாதிப்பு ஏற்படாத விதத்தில் வழங்கப்படும் என்றும் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு சுமந்திரன் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையினை முன்னெடுக்க வேண்டிய தேவை கிடையாது என்றும் அவர் தெரிவித்தார். (ம-3)

## திருக்கேதீஸ்வர...

திருக்கேதீஸ்வர வளைவு தொடர்பான வழக்குகளில் இரண்டு குற்றவியல் வழக்குகள் மன்னார் நீதவான் நீதிமன்றத்திலும் எழுத்தாணை சம்பந்தமான வழக்கு மன்னார் மேல் நீதிமன்றத்திலும் நேற்றுக் காலை பத்து மணியளவில் மேல் நீதிமன்ற நீதிபதி சஹாப்தீனின் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது

மன்னார் மேல் நீதி மன்றத்தில் எழுத்தாணை மீதான வழக்கில் 23ம் எதிர் மனுதாரரான திருக்கேதீஸ்வர ஆலயத்தினுடைய இணைச் செயலாளர் எஸ். இராம கிருஷ்ணன் சார்பிலும் 24வது எதிர் மனுதாரரான திருக்கேதீஸ்வர ஆலயம் சார்பிலும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் அவர்களுடன் சட்டத்தரணிகள் சயந்தன், எஸ்.கே. புரந்திரன், கணேசராஜன், ராகுல், செல்வி புராதணி, தர்மராஜ் வினோதன் ஆகியோரும் முன்னிலையாகியிருந்தனர்

எதிர் மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரியான்சி, அரச குலரெட்ண முன்னிலையாகியிருந்தார்

ஒன்று தொடக்கம் 22 வரையான எதிர்மனுதாரர்களான மன்னார் பிரதேச சபை உறுப்பினர்கள் சார்பில் சட்டத்தரணி செல்வராஜா டினேசன் ஆஜராகியிருந்தார்

நேற்றைய தினம் வழக்கின்படி எதிர் மனு தாரர்களின் 'தலையங்கம்' திருத்துவதற்கு நீதிமன்றம் அனுமதியளித்திருந்தது.

தலையங்கம் திருத்தியதன் பின்பு திருத்தப்பட்ட தலையங்கத்திற்கு ஆட்சேபனை அளிப்பதற்காக 23ம் 24ம் எதிர் மனுதாரர் சார்பில் ஆட்சேபனை அமைப்பதற்கு 13-7-2020 திகதியும்

அதற்குரிய மறு ஆட்சேபனையை மனுதாரர்கள் சார்பில் அமைப்பதற்கு 26-8-2020 திகதியும் வழங்கப்பட்டுள்ளதுடன்

திருக்கேதீஸ்வரம் வளைவு உடைப்பு சம்பந்தமான முழு வழக்கையும் விவாதிப்பதற்காக 26-10-2020 திகதிக்கு வழக்கு தவணையிடப்பட்டுள்ளது.

மேலும் நீதவான் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்குகளில் மன்னார் பொலிஸாரால் மேலதிக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில் அதன் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செயவதற்காகவும் எதிர்வரும் 10ஆம் மாதம் வரையான காலப்பகுதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (ம-3,285)

## இந்திய - சீன...

க்கை அதிகரிக்கலாம் எனவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்திய - சீன எல்லையில் பதற்றத்தை தணிக்க தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், லடாக் எல்லையின் கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் நேற்று முன்தினம் இரவு இரு தரப்பு படைகளுக்குமிடையே மீண்டும் மோதல் ஏற்பட்டது.

இதில் இந்திய இராணுவம் தரப்பில் ஒரு அதிகாரி, 2 வீரர்கள் என 3 பேர் உயிரிழந்துள்ளனர் என முதற்கட்டமாக தெரியவந்தது.

இந்நிலையில் இந்தியத் தரப்பில் 20 பேர் பலியாகியிருப்பதாவும், எண்ணிக்கை இன்னும் கூடுவதற்கு வாய்ப்புள்ளதாகவும் இராணுவம் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளையில் சீனத் தரப்பில் 43 பேர் வரை உயிரிழப்பு மற்றும் படுகாயம் அடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3)

## தேர்தல் சுவரெட்டி...

மிருந்து சுயேட்சைக் குழு வேட்பாளரின் 270 தேர்தல் சுவரொட்டிகள் மற்றும் முச்சக்கர வண்டி ஒன்று என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

விசாரணைகளின் பின்னர் தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டின் கீழ் சந்தேக நபர்கள் மூவரும் பருத்தித்துறை நீதிமனறில் இன்று முற்படுத்தப்படுவார்கள்" எனறும் பொலிஸார் குறப்பிட்டனர்.(ம-3)

## வவு...

பனிக்கர் புளியங்குளம பகுதியில் சென்ற இளைஞன் ஒருவரிடம் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது அவரது உடைமையிலிருந்து 6கிலோ 400கிராம் கேரளா கஞ்சாவினை மீட்டுள்ளனர்.

ஓமந்தை பறநாட்டங்கல் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞனை கைது செய்த படையினர் ஓமந்தை பொலி

ஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் இன்றைய தினம் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-3,299)


கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 16-06-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2450
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 15 34 37 45
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2020/06/16
சீட்டிழுப்பு இலக்கம் 0680
லக்கினம் மேடம்
வெற்றி இலக்கங்கள் 29 33 54 56

மெகா பவர்
திகதி 16/06/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0525
L 24
வெற்றி இலக்கங்கள் 17 66 71 78

கோடிபதி கப்ரக
N 03 21 36 65
சீட்டிழுப்பு இல. 576/586
திகதி: 16.06.2020
வர்ணம்: இளஞ்சிவப்பு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 83,229,285/-

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 922/952
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.06.16
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 62,904,230/-
வெற்றி இலக்கங்கள் 02 62 63 72
ஆங்கில எழுத்து U

ஜயோதா உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரங்கள் 1658 1664
வர்ணம் மஞ்சள்
திகதி 16.06.2020
வெற்றி இலக்கங்கள் 03 13 40 60
ஆங்கில எழுத்து I
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.49,269,568
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம் உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரங்கள் 2808 2833
வர்ணம் சிவப்பு
திகதி 16.06.2020
வெற்றி இலக்கங்கள் 32 33 34 54
ராசி விருச்சிகம்
திகதி: 24.03.2020 வெற்றி வாரம்: 2808
ரூ.500 பரிசுக்குரிய 9944
ரூ.100 பரிசுக்குரிய 293
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 21,41,564
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

மஹஜன சம்பத
திகதி 2020/06/16
சீட்டிழுப்பு இலக்கம் 4156
ஆங்கில எழுத்து Y
வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 3 6 1 2 7
தேசிய லொத்தர் சபை

## கணிதபாட வகுப்பு

தரம் 6 – 10 வரையான மாணவர்களுக்கு கணிதபாடம் தேசிய பாடசாலை ஆசிரியரினால் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

பாடத்தில் பின்தங்கியவர்களுக்கு விஷேட கவனம் செலுத்தப்படும்.

(3039) **077 033 1156**


# கற்றலில் சிரமப்படும் குழந்தைகள்; ஒன்லைன் மூலம் விழிப்புணர்வு

### இங்கிலாந்திலுள்ள தமிழ் மருத்துவர்கள் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஓட்டிஸம் உள்ள பிள்ளைகளின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள், சுகாதாரப் பணியாளர்கள், மருத்துவர்களுக்கான ஒன்லைன் கற்பித்தல் நாளை 18ஆம் திகதி முதல் ஒவ்வொரு வியாழக்கிழமையும் பிற்பகல் ஒரு மணி தொடக்கம் 3 மணி வரை நடைபெறும்.

இதனை இங்கிலாந்தில் இருக்கும் நரம்பியல் வளர்ச்சி, நரம்பியல் வளர்ச்சிக் கோளாறுகளுக்குரிய குழந்தை மருத்துவ நிபுணர் டாக்டர் கே.புவனேந்திரன் நடத்தவுள்ளார். சந்திப்பு இணைப்பு / The meeting link:https://ramagates.my.webex.com/meet/info சந்திப்பு எண் / meeting number: 163 1193268 கடவுச்சொல்/Password: child தொலை பேசி மூலம் சேரவும் :+44-20-7660-8149 சந்திப்பு எண் / Meeting number: 163 1193268 Download Webex/Webex பதிவிறக்கவும்.

(ம-3)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: **றாஜ் - 077 679 6623** (3043)

## பெண் வரவேற்பாளர் தேவை

CTHI கல்வி நிறுவனத்தில் வரவேற்பாளராக பணிபுரிவதற்கு O/L வரை கல்வி கற்ற 18 - 25 வரை வயதெல்லை கொண்ட K.K.S Road, உப்புமடம் சந்தியை அண்மித்து வசிப்பவர்கள் அதிகம் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு :
**077 104 1923** (C-9714)

## விரைவு பொதிகள் சேவை

### V2 TRAVELS

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
- நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய்
- மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

**0768226240** (C-9624)

## மீண்டும்

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (C-9685)

### அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- **021 222 6113**

### அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- **021 222 3536**

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரில் இயங்கிக் கொண்டிருக்கும் DNMC நிறுவனம் ஊடாக,

- விநியோகித்தல்
- மேற்பார்வையாளர்
- உதவி அலுவலர்
- நிர்வாக அதிகாரிகள்

தொடர்புகளுக்கு :
யாழ்ப்பாணம் - 076 808 2241 / மன்னார் - 077 230 2795 (C-3042)

## இந்திய சாஸ்திரியார் வருகை

ஓம் சக்தி அருள் வாக்குப்பெற்ற பரம்பரை ஜோதிடர்
சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ்பெற்ற

**இரத்தினசாமி** அவர்கள்

ஜாதகம், கைரேகை, எண்கணிதம்

திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாடு செல்லத்தடை மற்றும் குழந்தைப் பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில் தொடங்க மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் தொடர்புகொள்ளவும்.


முன்பதிவுக்கு: 071 5748358, 071 392 9703, 076 682 7368
இல.101, Kandy Rd, Jaffna. (யாழ்.நீதிமன்றத்திற்கு அருகில்) (2969)

## O/L மாணவர்களுக்கான கணித வகுப்புக்கள்

- Zoom Meeting ID No : 6746060803
- Zoom Meeting Pass Word : Kis=2020
- 35 வருட கற்பித்தல் அனுபவமுள்ள ஆசிரியர்.
- மாதத்தில் அனைத்து நாட்களும் அதிகாலை 4.30 - 6.30 வரை வகுப்புக்கள் நடைபெறும்.
- தமிழ் மொழி மூலம் கற்பிக்கப்படும்.
- ஆங்கில மொழி மூல மாணவர்களுக்காக ஆங்கிலச் சொற்கள் பயன்படுத்தப் படும்.
- மேலதிக தகவலுக்கு 076 170 2851 இல் தொடர்பு கொள்ளவும்.

(3036)


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15 - 04 - 1947

மறைவு
17 - 06 - 2014

### அமரர் சிற்றம்பலம் சின்னத்தம்பி

(ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை – பருத்தித்துறை)

**திதி : 09.07.2020**

ஆறாண்டு முடிந்ததுவோ உங்கள்
அன்பு முகம் நீங்கிச் சென்று
நீறான வடுக்கள் இங்கே ஒரு போதும்
ஆறாது அப்பா...
நிலம் வியக்க இங்கு நிறை வாழ்வு வாழ்ந்தவரே
ஆண்டுகள் நீண்டாலும் ஆறாது எம் துயரம்
இந்த நிலம் இருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்.


வரணி (3037) குடும்பத்தினர்

## துயர் பகிர்கின்றோம்

பொன்னாலையைச் சேர்ந்தவரும், இணைந்த வடக்கு – கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதம செயலரும், வடக்கு மாகாண சபையின் பிரதம செயலரும், முன்னாள் ஆளுநரின் செயலருமாகிய

### உயர்திரு சிவகுருநாதன் ரங்கராஜா

(முன்னாள் கௌரவ பொதுச் செயலர், பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானப் பரிபாலன சபை)



அன்னார் 15.06.2020 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். பொதுச்சேவைக்காகத் தன்னை அர்பணித்த உயர்ந்த பண்பாளனின் இழப்பு எம்மை மிகுந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. சி.ரங்கராஜா அவர்கள் உண்மையின் உறைவிடம், நேர்மை, கடமை, கண்ணியம், விடாமுயற்சி, தன்னம்பிக்கை மற்றும் எத்தனை உயரிய பண்புகள் உள்ளனவோ அவை அத்தனையையும் தன்னகத்தே கொண்ட ஒரு கனவான்.

வடக்கு – கிழக்கு மாகாண மக்களுக்கு அவர் வழங்கிய சேவை அளப்பரியது. சரித்திரப் புகழ் வாய்ந்த பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாளின் மீது எல்லையற்ற பக்தி கொண்ட இவர் ஆலயப் பரிபாலன சபையின் உறுப்பினராக 1984ஆம் ஆண்டு தர்மகர்த்தா அவர்களால் நியமிக்கப்பட்டார். தொடர்ச்சியாக ஆலயச் செயற்பாடுகளில் ஈடுபட்டதோடு 2013 ஆம் ஆண்டிலிருந்து கௌரவ பொதுச் செயலராக பதவி வகித்து சபையின் நிர்வாக முன்னேற்றத்தில் பெரும் பங்காற்றியுள்ளார். இவரது காலப்பகுதியில் பல திருப்பணிகள் நிறைவு பெற்றன என்பதனை நாராயணன் அடியார்களாகிய நாம் நன்றியோடு நினைவு கூறுகின்றோம்.

பொன்னாலைக்கும் இந் நாட்டிற்கும் அன்னாரது இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்று. தமிழ் உலகின் சிறந்த ஆளுமையின் இழப்பு ஆகும். சி.ரங்கராஜா அவர்கள் இவ்வுலகில் செய்த தர்ம காரியங்களினால் அந்த பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் அவரது ஆத்மாவை தன்னோடு அரவணைத்து கொள்வார். பெரும் தலைவனின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

பொன்னாலை
ஸ்ரீ வரதராஜப் பெருமாள் அடியார்கள் (3032)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது